# தினபூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 151 வைகாசி 10

RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, சனி, மே 24, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**வங்கதேசத்தில் மீண்டும் பதற்றம்: இடைக்கால அரசின் ஆலோசகர் யூனுஸ் ராஜினாமா செய்ய முடிவு**

...2-ம் பக்கம்

**வடகிழக்கு மாநிலங்கள் பன்முகத்தன்மை கொண்டவை: பிரதமர் மோடி பெருமிதம்**

...3-ம் பக்கம்

**இங்கி., டெஸ்ட் தொடர்: இந்திய அணியை இன்று அறிவிக்கிறது பி.சி.சி.ஐ**

...6-ம் பக்கம்



● புதுடெல்லியில் இன்று நடைபெறவுள்ள நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நேற்று புதுடெல்லி சென்ற தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை விமான நிலையத்தில் மக்களவை குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை குழுத்தலைவர் திருச்சி சிவா, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆ.ராசா, ஜெகத்ரட்சகன், வில்சன் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், புதுடெல்லி தமிழ்நாடு இல்லத்தின் உள்ளுறை ஆணையர் ஆஷிஷ் குமார் ஆகியோர் சால்வை அணிவித்து மலர்கொத்து வழங்கி வரவேற்றனர்.

### நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க டெல்லி சென்ற

# முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு

## பிரதமர் நரேந்திரமோடியை சந்தித்து பேசுகிறார்

புதுடெல்லி, மே 24-

**நடப்பு நிதியாண்டிற்கான நிதி ஆயோக் கூட்டம் தலைநகர் டெல்லியில் இன்று (24ம் தேதி )நடைபெற உள்ளது. பிரதமர் மோடி தலைமையில் நடைபெறும் நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க அனைத்து மாநில முதல்வர்களுக்கு மத்திய அரசு அழைப்பு விடுத்தது. அந்த வகையில் நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்கிறார்.**

**விமானம் மூலம்....**

இந்தநிலையில் பிரதமர் மோடி தலைமையிலான நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்க முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காலை 9.30 மணி அளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் டெல்லி புறப்பட்டு சென்றார். டெல்லி விமான நிலையத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, மேள தாளங்களுடன் தி.மு.க.வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். டெல்லி சிறப்பு பிரதிநிதி விஜயன், எம்.பி.க்கள் டி.ஆர். பாலு, ஆ.ராசா, கலாநிதி வீராசாமி, ஜெகத்ரட்சகன், திமுக மாநிலங்களவை குழுத் தலைவர் திருச்சி சிவா, உள்ளிட்டோர் சால்வை அணிவித்து, மலர்கொத்து வழங்கி வரவேற்றனர்.

**பிரதமர் மோடியை...**

டெல்லியில் முக்கிய பிரமுகர்களை முதல்வர் மு..ஸ்டாலின் சந்தித்து பேச உள்ளார். நிடி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்று, தமிழகத்தின் நிதி தேவைகளை பூர்த்தி செய்யும்படி முதல்வர்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்த உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கூட்டம் முடிந்து, இன்றே சென்னை திரும்புகிறார். இதற்கிடையே பிரதமர் மோடியை தனியாக சந்தித்து பேச, முதல்வர் மு.க.ஸ்டாலின் தரப்பில் நேரம் கேட்கப்பட்டுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மேலும் கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநில முதல்வர்களை சந்தித்து பேசுவதற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிகிறது.

> ❝தமிழகத்துக்கான நியாயமான நிதி உரிமையை நிதி ஆயோக் கூட்டத்தில் வெளிப்படுத்த உள்ளேன். கொண்ட கொள்கையில் உறுதியாக நிற்பேன். தமிழகத்துக்கான நிதியை போராடி பெறுவேன்.❞
>
> \- முதல்வர் மு.க.ஸ்டாலின்

# தமிழகத்தில் ஜூன் 2-ல் பள்ளிகள் திறப்பு உறுதி

## தொடக்கக் கல்வி இயக்ககம் தகவல்

சென்னை, மே 25-

**தமிழகத்தில் ஜூன் 2-ம் தேதி பள்ளிகள் திறக்கப்படும் என்று தொடக்கக் கல்வி இயக்ககம் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.**

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் செயல்படும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ஏப்ரல் 30 ஆம் தேதியுடன் கோடை விடுமுறை விடுக்கப்பட்டது. ஜூன் 1 ஆம் தேதி வரை விடுமுறை என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கோடை வெய்யிலை பொறுத்து பள்ளிகள் திறப்பு தள்ளிப் போகலாம் என்று தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில், வெய்யிலின் தாக்கம் குறைந்திருப்பதால் திட்டமிட்டபடி ஜூன் 2 பள்ளிகள் திறக்கப்படும் என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் கடந்த வாரம் தெரிவித்திருந்தார். தற்போது தொடக்கக் கல்வி இயக்ககம் அதனை உறுதி செய்து சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது. அதில், ஜூன் 2-ம் தேதி பள்ளிகளைத் திறப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வட்டாரக் கல்வி அலுவலர்கள் மூலம் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறும் மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

# கோவை, நீலகிரிக்கு ‘ரெட் அலர்ட்’

சென்னை, மே 24-

**கோவை, நீலகிரி மாவட்டத்தில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும் இன்று பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

தென்மேற்கு பருவமழை, கேரளாவில் அடுத்த இரண்டு தினங்களில் துவங்குவதற்கான வாய்ப்புள்ளது. அதே சமயத்தில் தமிழகத்தில் சில பகுதிகளிலும் பரவுவதற்கான வாய்ப்புள்ளது. மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி வருகின்ற 27-ம் தேதி வாக்கில் உருவாகக்கூடும். இதன் காரணமாக இன்று (மே 24), தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும். திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மே 24 முதல் மே 27ம் தேதி வரை, தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் குறையக்கூடும். சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், இன்று (மே 24) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

### பேரிடர் மீட்புப்படை விரைவு

**நீலகிரி, கோவை மாவட்ட கலெக்டர்களுடன் பேரிடர் மேலாண்மை துறை அதிகாரிகள் ஆலோசனை நடத்தினர். முன்னெச்சரிக்கை பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு 3 மாநில பேரிடர் மீட்புப் படை அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. ஊட்டி, வால்பாறைக்கு தலா ஒரு தேசிய பேரிடர் மீட்புப் படை குழுவினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். தீயணைப்பு துறை, மின்சாரம்,நெடுஞ்சாலைத்துறை என அனைத்து துறைகளும் தயார் நிலையில் இருக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது.**

# தமிழகத்தில் பொது இடங்களில் முக கவசம் கட்டாயம் இல்லை

## பொது சுகாதாரத்துறை இயக்குனர் விளக்கம்

சென்னை, மே 25-


**கொரோனா அதிகரிப்பு காரணமாக முக கவசம் அணிவது அவசியம் என்று சமூக வலைதளங்களில் தகவல் வெளியான நிலையில், தமிழகத்தில் பொது இடங்களில் முக கவசம் கட்டாயம் இல்லை என்று பொது சுகாதாரத் துறை இயக்குனர் விளக்கமளித்துள்ளார்.**

கொரோனா பாதிப்பு, 2019ம் ஆண்டு இறுதி முதல், 2023ம் ஆண்டு வரை தீவிர பாதிப்பை ஏற்படுத்தியது. கடந்த இரண்டு ஆண்டுகளாக அவ்வப்போது கொரோனா பாதிப்பு சற்று அதிகரித்தாலும், தீவிர பாதிப்பாக இது வரை மாறவில்லை. தற்போது, ஹாங்காங், சிங்கப்பூரில் கொரோனா பாதிப்பு அதிகரித்து காணப்படும் நிலையில், இந்தியாவிலும் பல்வேறு மாநிலங்களில் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை சற்று அதிகரித்து வருகிறது.

தமிழகத்தில் கொரோனா பாதிப்பு உள்ளது. ஆனால், தீவிர பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இல்லை. தற்போது, வீரியம் குறைந்த கொரோனா தொற்று பாதிப்பு தான் உள்ளது. 'ஒமைக்ரான்' வகை வைரஸ் உட்பிரிவுகளான,ஜெ.என்., 1 மற்றும் எக்.இ.சி., ஆகிய தொற்றுகளே காணப்படுகின்றன. இந்நோயின் தாக்கம் மற்றும் இறப்பின் விகிதம் குறைந்தே காணப்படுகிறது. ஆனாலும், பொது இடங்களில் முகக்கவசம் அணிதல், தொற்று தடுப்பு வழிமுறைகளை கடைப்பிடித்தல் அவசியம். காய்ச்சல், நுரையீரல் சார்ந்த நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், அருகில் உள்ள டாக்டரை அணுகி, சிகிச்சை பெறுவது அவசியம் என்று கூறப்படுகிறது. இந்தநிலையில், தமிழ்நாட்டில் கொரோனா தொற்று எண்ணிக்கை குறைவாக இருப்பதால், பொதுமக்கள் யாரும் அச்சப்பட வேண்டியதில்லை. பொது இடங்களில் முக கவசம் கட்டாயம் இல்லை என தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை இயக்குனர் செல்வவிநாயகம் கூறியுள்ளார். முக கவசம் அணிவது அவசியம் என்று சமூக வலைதளங்களில் தகவல் பரவிய நிலையில் அவர் விளக்கம் அளித்துள்ளார்.




**மார்க்கெட் விலை நிலவரம்**




| BSE | NSE |
|---|---|
| ▲ 769.09 | ▲ 243.45 |
| பாயின்ட் 81,721.08 | பாயின்ட் 24,853.15 |



**தங்கம்**
1 சவரன் ₹71,520
1 கிராம் ₹8,940



**வெள்ளி**
1 கிலோ ₹111,000
1 கிராம் ₹111.00



**டாலர்** ₹85.18



**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24


## வங்கதேசத்தில் மீண்டும் பதற்றம்: ராஜினாமா செய்ய முகமது யூனுஸ் முடிவு

டாக்கா, மே 24-

வங்கதேசத்தில் தேர்தலை விரும்பாத முகமது யூனுஸ் ராஜினாமா செய்வதாக மிரட்டல் விடுத்துள்ளார்.

வங்கதேசத்தில் டிசம்பர் மாதத்துக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ராணுவத் தலைவர் ஜெனரல் வேக்கர்-உஸ்-ஜமான் அழைப்பு விடுத்துள்ள நிலையில், அந்நாட்டு இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான முகமது யூனுஸ், அனைத்து கட்சிகளும் அவருக்கு முழு ஆதரவை வழங்கவில்லை என்றால் ராஜினாமா செய்யப் போவதாக மிரட்டியுள்ளார்.

அதிகாரத்தை தக்கவைக்கும் வகையில் போராட்டத்தை தூண்டுவதற்கான ஒரு சூழ்ச்சியாக யூனுஸின் ராஜினாமா வதந்தி பார்க்கப்படுகிறது. வேலை இடஒதுக்கீட்டுக்கு எதிரான மாணவர்கள் தலைமையிலான



போராட்டம் ஷேக் ஹசீனாவுக்கு எதிரான இயக்கமாக மாறி, ஆகஸ்ட் 5, 2024 அன்று பிரதமர் ஹசீனா டாக்காவை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனையடுத்து வங்கதேச இடைக்கால அரசாங்கத்தின் தலைமை ஆலோசகர் பதவியை நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் ஏற்றுக் கொண்டார்.

இந்த சூழலில், வரும் டிசம்பர் மாதத்திற்குள் நாட்டில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று ராணுவத் தலைவர் ஜெனரல் வேக்கர்-உஸ்-ஜமான் அழைப்பு விடுத்துள்ளார். அதேபோல உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என முக்கிய கட்சியான வங்கதேச தேசியக் கட்சி போராட்டங்களில் குதித்துள்ளது. இதனையடுத்து அனைத்து தரப்பின் ஆதரவைப் பெறும் தீவிர முயற்சியில், வங்கதேச இடைக்கால அரசாங்கத்தின் தலைவர் முகமது யூனுஸ் ராஜினாமா செய்யப்போவதாக மிரட்டியுள்ளார்.

இதற்கு எதிராக யூனுஸுக்கு ஆதரவு தெரிவித்து, டாக்காவில் ஆர்ப்பாட்டம் நடத்தவும், ராணுவ கன்டோன்மென்ட்டுக்கு அணிவகுத்துச் செல்லவும் மாணவர் தலைவர்களும், இளைஞர்களையும் திரட்டும் பணியை தொடங்கியுள்ளனர். குறிப்பாக வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பிறகு, பேரணியில் இணைய வேண்டும் என சமூக ஊடகங்களில் பிரச்சாரத்தை சிலர் தொடங்கியுள்ளனர்.

## பாக்.கிற்கு 1 பில்லியன் டாலர் ஏன்? சர்வதேச நாணய நிதியம் விளக்கம்

புதுடெல்லி, மே 23-

பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் டாலர் வழங்கியது தொடர்பாக நாணய நிதிக்கு விளக்கம் கேட்டுள்ளது.

இந்தியாவின் ஆட்சேபனைகளையும் மீறி, பாகிஸ்தானுக்கு 1 பில்லியன் டாலர் வழங்கியதை சர்வதேச நாணய நிதியம் நியாயப்படுத்தியுள்ளது. இந்த கடன் தவணையைப் பெறுவதற்கு தேவையான அனைத்து இலக்குகளையும் பாகிஸ்தான் அடைந்துள்ளது என ஐ.எம்.எப். தெரிவித்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர் சந்திப்பில் பேசிய ஐ.எம்.எப்.-ன் தகவல் தொடர்புத் துறை இயக்குநர் ஜூலி கோசாக், "பாகிஸ்தான் உண்மையில் அனைத்து இலக்குகளையும் அடைந்துவிட்டதாக எங்கள் வாரியம் கண்டறிந்துள்ளது. அது சில சீர்திருத்தங்களில் முன்னேற்றம் கண்டுள்ளது, அதனால்தான், வாரியம் முன்னோக்கிச் சென்று நிதி வழங்கும் திட்டத்தை அங்கீகரித்தது.

இதற்கான முதல் மதிப்பாய்வு 2025-ம் ஆண்டின் முதல் காலாண்டில் திட்டமிடப்பட்டது. மேலும் அந்தக் காலக்கெடுவுக்கு இணங்க, மார்ச் 25, 2025 அன்று, ஐ.எம்.எப். ஊழியர்களும், பாகிஸ்தான் அதிகாரிகளும் விரிவாக்கப்பட்ட நிதி வசதிக்கான முதல் மதிப்பாய்வு குறித்து ஊழியர்கள் அளவிலான ஒப்பந்தத்தை எட்டினர். அது அந்த ஊழியர்கள் அளவிலான ஒப்பந்தம், பின்னர் எங்கள் நிர்வாக குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அது மே 9 அன்று மதிப்பாய்வை நிறைவு செய்தது. இதன் காரணமாக அந்த நேரத்தில் பாகிஸ்தான் நிதியை பெற்றது" என்று அவர் மேலும் கூறினார். சர்வதேச நாணய நிதியத்தால் செப்டம்பர் 2024 இல் அங்கீகரிக்கப்பட்ட விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ், பாகிஸ்தான் சுமார் 2.1 பில்லியன் டாலர்களைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

## பெரும்பிடுகு முத்தரையருக்கு விஜய் புகழாரம்

சென்னை, மே 24-

தோல்வியே காணாத வரலாற்றுச் சிறப்புமிக்க வாகை நாயகர் என்று பெரும்பிடுகு முத்தரையருக்கு விஜய் புகழாரம் சூட்டியுள்ளார்.

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் 1350-வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு பெரும்பிடுகு முத்தரையருக்கு த.வெ.க. தலைவரும் நடிகருமான விஜய் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக விஜய் வெளியிட்டுள்ள பதிவில்,

'தமிழ் நிலத்தில் போரில் வென்ற மன்னர்கள் வாகை மலர் சூடி மகிழ்வார்கள். அக்காலத்தில், தன்னுடைய போர்த்திறம் வெற்றியைத் தன்னம்பிக்கையுடன் உறுதி செய்து, போருக்குச் செல்லும் முன்பே வாகை மலர் சூடிச் சென்றவர், மாமன்னர் பெரும்பிடுகு முத்தரையர். தோல்வியே காணாத வரலாற்றுச் சிறப்புமிக்க வாகை நாயகர். அரசர்களுக்கு எல்லாம் பேரரசராகத் திகழ்ந்த அரச வாகை கொண்ட பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் பிறந்த நாளில், தமிழ் மண்ணுக்கும் தமிழர் உரிமைக்கும் அவர் ஆற்றிய சேவைகளைப் போற்றி மகிழ்வோம்' இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

## பாகிஸ்தான் அம்பலப்படுத்தப்பட்டு உள்ளது: அமைச்சர் அமித்ஷா பேச்சு

புதுடில்லி, மே 24-

'எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் பாகிஸ்தான் ஈடுபடுவது உலகிற்கு அம்பலப்படுத்தப்பட்டு உள்ளது' என மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவித்துள்ளார்.



டில்லியில் நடந்த எல்லைப் பாதுகாப்புப் படை விழாவில் அமித்ஷா பேசியதாவது: பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பயங்கரவாதி முகாம்களை மட்டுமே அழித்தோம். பாகிஸ்தானின் எந்த ராணுவ நிலைகளையும் இந்தியா குறிவைத்து தாக்கவில்லை. உலகம் முழுவதும் பயங்கரவாத தாக்குதல்களுக்கு பல நாடுகள் பதில் அளித்துள்ளன. பயங்கரவாதிகளுக்கு இந்தியா அளித்த பதில் அவற்றில் மாறுபட்டது.

பாகிஸ்தானுக்கு பாதுகாப்பு படையினர் மிகச்சிறந்த முறையில் பதிலடி கொடுத்தனர். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு உலகமே பாராட்டுகிறது. நான் ராணுவ வீரர்களுக்கு தலைவணங்குகிறேன். நமது நாடு பல தசாப்தங்களாக பாகிஸ்தானால் ஆதரிக்கப்படும் பயங்கரவாதத்தை எதிர்கொண்டு வருகிறது. பஹல்காமில், பயங்கரவாதிகள் நம் மக்களை கொடூரமாக கொன்றனர். பிரதமர் மோடி தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என்று கூறினார்.

அந்த பதில் இன்று தெளிவாகத் தெரிகிறது. முழு உலகமும் இப்போது நமது ஆயுதப் படைகளையும், அவர்களின் தாக்குதல் திறன்களையும் பாராட்டுகிறது. பாகிஸ்தானுக்கு எதிராக துல்லியமாக தாக்குதல் நடத்திய பாதுகாப்பு படை வீரர்களை பாராட்டுகிறேன். எல்லை தாண்டிய பயங்கரவாதத்தில் பாகிஸ்தான் ஈடுபடுவது உலகிற்கு அம்பலப்படுத்தப்பட்டு உள்ளது. பயங்கரவாதிகளின் இறுதிச் சடங்கில் பாகிஸ்தான் ராணுவ அதிகாரிகள் கலந்து கொண்டனர். இவ்வாறு அமித்ஷா பேசினார்.

## அவசரமாக தரையிறங்க இந்திய விமானி கோரிக்கையை நிராகரித்த பாகிஸ்தான்

புதுடெல்லி, மே 24-

சேதமடைந்த விமானத்தை தரையிறக்க இந்திய விமானி கோரிக்கையை நிராகரித்த பாகிஸ்தான்.

டெல்லியில் இருந்து இண்டிகோ விமானம் ஸ்ரீநகர் சென்றபோது திடீரென வானிலை மாறியதை அடுத்து, பாகிஸ்தான் வான்வெளியை பயன்படுத்த விமானி அனுமதி கோரியுள்ளார். அதற்கு அந்நாடு அனுமதி மறுத்துள்ளது. விமானத்தின் மூக்குப் பகுதியில் சேதம் ஏற்பட்டதைக் கூறியும் பாகிஸ்தான் அனுமதி மறுத்த நிலையில் விமானி சாதுர்யமாக ஸ்ரீநகர் விமான நிலையத்தில் விமானத்தை பத்திரமாக தரையிறக்கியுள்ளார். அவருக்குப் பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

கடந்த புதன்கிழமை மாலை இண்டிகோ பயணிகள் விமானம் ஒன்று டெல்லியில் இருந்து ஸ்ரீநகர் நோக்



கிச் சென்றது. விமானம் அமிர்தசரஸ் நகரக்கு மேலே பறந்து கொண்டிருந்தபோது, திடீரென பெய்த ஆலங்கட்டி மழையால் விமானம் சேதமடைந்தது. இதையடுத்து, விமானத்துக்குள் கொந்தளிப்பான சூழல் ஏற்பட்டு பயணிகள் அனைவரும் கலக்கமடைந்தனர்.

விமானத்தை பாகிஸ்தான் வான்வெளிக்குள் திருப்ப முடிவெடுத்த விமானி, அதற்காக லாகூர் விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டிடம் அனுமதி கோரியுள்ளார். எனினும், இந்திய விமானம் பாகிஸ்தான் வான்வெளியில் பறக்க அனுமதி மறுக்கப்பட்டது. விமானியின் சாதுர்யம்' - 227 பயணிகளுடன் இருந்த அந்த விமானம், கடுமையான வானிலைக்கு மத்தியில் ஸ்ரீநகரில் மாலை 6.30 மணி அளவில் பத்திரமாக தரையிறக்கப்பட்டது.

முன்னதாக, விமானம் ஸ்ரீநகரை நெருங்கியதும், விமானி அவசரநிலையை அறிவித்தார். அனைத்து பயணிகளும் பணியாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். ஆலங்கட்டி மழை காரணமாக விமானத்தின் மூக்கு பகுதி சேதமடைந்ததை அடுத்து, அவசர பழுது பார்ப்புக்காக விமானம் நிறுத்தப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டது.

## ஆன்மீக பேச்சாளர் மகா விஷ்ணுவின் பரம்பொருள் அறக்கட்டளை மூடல்

சென்னை, மே 24-

சென்னை அரசுப் பள்ளியில் சர்ச்சைக்குரிய வகையில் பேசி கைதான ஆன்மீக பேச்சாளர் மகா விஷ்ணு, திருப்பூரில் தான் நடத்தி வந்த பரம்பொருள் அறக்கட்டளையை மூடுவதாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- என் உயிரும், உள்ளமும் கலந்த பரம்பொருள் அறக்கட்டளையை முடிவுக்கு கொண்டு வருகிறேன். கடந்த பல வருடங்களாக பரம்பொருள் அறக்கட்டளை இறை அருளால் என் வழியாகப் பெரும்பாலும் இயற்கையாகவே உருவாகி, லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை மாற்றியது. இப்போது, நான் ஒரு புதிய புள்ளியை அடைந்திருக்கிறேன். என் உள்ளத்தின் மவுனம், அமைதி மற்றும் பரிபூரண நிலை என்னை எல்லா வெளியிலான கட்டமைப்புகளிலிருந்தும் விலகச் சொல்கிறது. நான் ஒரு அமைப்பின் தலைவராக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லை எனக் கருதுகிறேன்.

என் சொந்த ஆன்மீக வளர்ச்சிக்காக (சுயநலம் சார்ந்து), பரம்பொருள் அறக்கட்டளையை மூடுகிறேன். இனிமேல் பரம்பொருள் அறக்கட்டளையின் வங்கிக் கணக்கிற்கு எந்த விதமான பணமும் அனுப்ப வேண்டாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஓகா ஓய்வு: கடைசி வேலை நாளிலும் 10 தீர்ப்பு

புதுடில்லி, மே 24-

ஓய்வுபெறும் சுப்ரீம் கோர்ட் நீதிபதி ஏ.எஸ். ஓகா, மரபை ஒதுக்கி, கடைசி வேலை நாளிலும் 10 வழக்குகளில் தீர்ப்பளித்துள்ளார்.

சுப்ரீம் கோர்ட்த்தின் மிக மூத்த நீதிபதிகளில் மூன்றாவது நீதிபதியாக அறியப்படும் அபய் ஸ்ரீனிவாஸ் ஓகா என்னும் ஏ.எஸ். ஓகா நேற்றுடன் பணி ஓய்வுபெற்றார். தனது கடைசி வேலை நாளான நேற்றும், அவர் தான் விசாரித்து வந்த 10 வழக்குகளில் தீர்ப்பளித்திருக்கிறார். ஓகாவின் தாய் இறந்து இரண்டு நாள்களில் பணிக்குத் திரும்பியிருக்கும் ஏ.எஸ். ஓகா, மே 24ஆம் தேதியுடன் பணி ஓய்வுபெறும் நிலையில் நேற்று அவரது கடைசி பணி நாளாக அமைந்துவிட்டது.

சுப்ரீம் கோர்ட் நீதிபதியாக பணியாற்றி ஓய்வுபெறும் ஏ.எஸ். ஓகா, தனது பணிக்காலத்தில் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பு மூலம் முன்னுதாரணமாக மாறியிருக்கிறார். நாட்டிற்கு அவர் ஆற்றிய சேவைக்கும் அநீதியை எதிர்த்துப் போராடும் திறனுக்கும் வழக்குரைஞர்கள் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொண்டுள்ளனர்.

கடந்த 21ஆம் தேதி, சுப்ரீம் கோர்ட் பதிவு பெற்ற வழக்குரைஞர்கள் சங்கம் சார்பில் அவருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை நிகழ்ச்சியின் போதுதான், நீதிபதி ஏ. எஸ். ஓகா, தனது தாய் வசந்தி ஓகா காலமானதாகவும், வியாழக்கிழமை அவரது இறுதிச் சடங்குகள் தாணேவில் நடைபெறவிருப்பதாகவும் அறிவித்தார். நேற்று நேற்று தாயாரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்ற நிலையில், நேற்று பணிக்குத் திரும்பிய நீதிபதி ஏ.எஸ். ஓகா, தான் விசாரித்து வந்த 10 வழக்குகளில் தீர்ப்பையும் வெளியிட்டுள்ளார்.

## தமிழ் மொழியை துடிப்புடன் வைத்திருக்க வேண்டும்: சிங்கப்பூர் அமைச்சர் அறிவுரை

சிங்கப்பூர், மே 24-

தமிழ் மொழியை மாணவர்கள் அடுத்த 50 ஆண்டுகளுக்கு துடிப்புடன் வைத்திருக்க வேண்டும் என சிங்கப்பூர் சட்டத்துறை அமைச்சர் கே.சண்முகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தமிழ் மொழி சங்கத்தின் 50-வது ஆண்டு நிறைவு விழாவில், மாணவர்களிடம் கே.சண்முகம் பேசியதாவது ;- "அடுத்த 50 ஆண்டுகளுக்கு தமிழைத் துடிப்பாக வைத்திருக்க, உங்களைப் போன்ற இளைய தலைமுறையினர் எங்களுக்கு தேவை. அடுத்த 20 அல்லது 30 ஆண்டுகளுக்குப் பிறகு, மேடையில் சரளமாக தமிழ் பேசக்கூடிய அமைச்சர்கள் நம்மிடம் இருப்பார்களா என்று நம்மை நாமே கேட்டுக் கொள்ள வேண்டும்.

தமிழை பேசாதவர்கள், இனி வரும் காலங்களில் தமிழை மரியாதைக்குரிய மொழியாக கருதுவார்களா? என்றும் நாம் நம்மை கேட்டுக்கொள்ள வேண்டும். பிற மொழிகளை பேசுபவர்களுக்கு தமிழ் மொழி எளிதில் அணுகக்கூடிய ஒன்றாகவும், ஈடுபாட்டுடன் பேசக்கூடிய மொழியாகவும் இருக்க வேண்டும். வகுப்பறைகள் மற்றும் சமூக மையங்களுக்கு வெளியே உள்ள இடங்களிலும் தமிழ் மொழி இடம்பெற வேண்டும். பல இளைஞர்கள் பெரும்பாலும் ஆங்கிலம் பேசுகிறார்கள். இது தமிழ் மொழியை மட்டுமல்ல, மாண்டரின் மற்றும் மலாய் போன்ற பிற மொழிகளையும் பாதிக்கும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## குன்னூரில் பழக்கண்காட்சி தொடக்கம்

குன்னூர், மே 24-

குன்னூரில் 65-வது பழ கண்காட்சி தொடங்கியுள்ளது.

குன்னூர் சிம்ஸ் பூங்காவில் 65-வது பழக் கண்காட்சியானது நேற்று (மே 23) முதல் மே 26 வரை நான்கு நாட்கள் நடைபெற உள்ளதால் சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வருகை புரிந்து இக்காட்சியினை கண்டு ரசிக்குமாறு மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத்துறையின் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தியாவின் தலைசிறந்த சுற்றுலா தலமாக விளங்கும் நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளை கவரவும், அவர்களை உற்சாகப்படுத்தவும் வருடம் தோறும் தோட்டக்கலைத் துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு காட்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

இதனை தொடர்ந்து 65-வது பழக் கண்காட்சி நேற்று குன்னூர் சிம்பூங்காவில் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பவ்யா தலைமையில் அரசு தலைமை கொறடா கா.ராமசந்திரன் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது.


இவ்வாண்டு பழக் கண்காட்சியின் சிறப்பம்சமாக எலுமிச்சை பழங்களைக் கொண்டு பிரம்மாண்ட எலுமிச்சை வடிவமைப்பு, பழரசக்கோப்பை, கடற்கரை குடை, கார், பழ கேக், பழ ஐஸ்கிரீம், தொப்பி, விசில் கண்ணாடி, நீர் சறுக்கு மட்டை, பழ கூடைப்பந்து மற்றும் இளநீர் போன்ற வடிவமைப்புகள் 3.8 டன் எடையுள்ள பல்வேறு பழங்களைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள பிற மாவட்டங்களின் பழ வகைகளை பறைசாற்றும் விதமாக பல்வேறு காட்சி திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் கரூர், வேலூர், திருப்பத்தூர், கடலூர், பெரம்பலூர், திருச்சி, புதுக்கோட்டை, சிவகங்கை, தென்காசி மற்றும் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களை சார்ந்த தோட்டக்கலை துறையினரால் பல்வேறு பழங்களை கொண்டு விதவிதமான உருவங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இவ்வருடம் சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்கள் கண்டுகளிக்கும் வகையில் பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகள் தோட்டக்கலைத்துறையின் மூலம் நடத்தப்படவுள்ளது.

65வது பழக் கண்காட்சியானது நேற்று(மே 23) முதல் மே 26 வரை நான்கு நாட்கள் நடைபெற உள்ளதால் சுற்றுலாப்பயணிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் வருகை புரிந்து இக்காட்சியினை கண்டு ரசிக்குமாறு மாவட்ட நிர்வாகம் மற்றும் தோட்டக்கலைத்துறையின் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**24-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** வீண் வம்புக்கு செல்லாதிருப்பது நல்லது. பெண்களால் விரயச் செலவுகள் ஏற்படும். செலவுகளைக் குறைக்க அத்தியாவசியப் பொருட்களை மட்டும் வாங்கவும்.

**ரிஷபம்:-** தனவரவு அதிகரிக்கும். பெண்கள் மூலம் எதிர்பார்த்த இலாபங்கள் ஏற்படும். ஆரோக்கியம் மேம்படும் அனுகூலமான நாள். டாக்டர்கள் கைவிட்ட கேஸ் கூட உடல் நலம் பெற்று படுக்கையை விட்டு துள்ளி எழுவர்.

**மிதுனம்:-** வாழ்க்கையில் நல்ல மாற்றங்கள் இனிய திருப்பங்கள் ஏற்படும். அரசு உதவிகள், புதிய வேலை வாய்ப்பு, கல்வியில் தேர்ச்சி என அனுகூலமான பலன்களை எதிர்பார்க்கலாம்.

**கடகம்:-** தீவிர தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும். புத்திர பாக்கியம் ஏற்படும். திருவருளாலும், குருவருளாலும் வாழ்க்கையில் நல்ல திருப்பங்கள் ஏற்படும். புனித பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

**சிம்மம்:-** எவரையும் ஏமாற்ற நினைக்காதீர்கள். மனைவியின் கலகத்தால், உறவுக்குள் குழப்பம் உண்டாகும். அதிகாரிகளிடம் பணிவாக நடந்தால் பணியிடத்தில் சாதகமான சூழல் உருவாகும்.

**கன்னி:-** எல்லா விதத்திலும் ஏற்றம் தரும் நாள். இனிமையான, மற்றும் சாதுர்யமான பேச்சாற்றலால் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். குடும்ப சுகத்தில் திருப்தி ஏற்படும்.

**துலாம்:-** வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. பெண்ணின் சிநேகமும், தனக்கெனத் தனி வீடு வாங்கும் எண்ணம் எழும். குடும்பத்தில் சுபகாரிய கொண்டாட்டங்கள் நிறைவேறும்.

**விருச்சிகம்:-** தங்கள் பொருட்களை கவனமுடன் பாதுகாக்க வேண்டிய நாள். பயணங்களின் போதும் எச்சரிக்கை தேவை. வியாபாரிகளுக்கு தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடையாது.

**தனுசு:-** அன்னையின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளுங்கள். அதிக முயற்சி எடுத்து முன்னேற முயலுங்கள். வெற்றி உங்கள் பக்கம். நீர்நிலைகளில் கவனமுடன் இருங்கள்.

**மகரம்:-** செல்வ நிலை சீராக உயரும். அரசால் ஆதாயங்கள் ஏற்படும். பாக்கிய விருத்தி ஏற்படும். சாதுர்யமான பேச்சால் அனைவரையும் கவர்ந்திடுவீர்கள். பலவகைகளில் மனைவி உதவி செய்வாள்.

**கும்பம்:-** கவனமாகப் படித்தால் கல்வியில் தேர்ச்சி பெறலாம். வாக்குவாதங்களை தவிர்த்தால் இல்லத்தில் அமைதி நிலவும். காரியங்கள் கைகூட கடின உழைப்புத் தேவை.

**மீனம்:-** தனவரவு ஏற்பட்டு மகிழும் நாள். புதிய பதவிகள், வாகனம், வசதி வாய்ப்புகள் என எல்லா விதத்திலும் முன்னேற்றம் ஏற்படும். வாய்க்கு ருசியான உணவு கிடைக்கும்.

## ஓசூரில் ரூ.400 கோடியில் டைடல் பூங்காவுக்கான டெண்டர் வெளியீடு

சென்னை, மே 24-

ஓசூரில் ரூ.400 கோடியில் டைடல் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் 2025-26-ம் ஆண்டிற்கான பட்ஜெட்டை, சட்டசபையில் கடந்த மார்ச் மாதம் 14-ம் தேதி நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் அரசு ஊழியர்கள், பெண்கள் என பல்வேறு தரப்பினருக்கும் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. மேலும் 5 லட்சம் சதுர அடி பரப்பளவில் உயர்தர அலுவலக வசதிகளுடன் ஓசூரில் ரூ.400 கோடியில் டைடல் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், பட்ஜெட் அறிவிப்பின்படி கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் ரூ.400 கோடியில் அமைய உள்ள டைடல் பூங்கா - விரிவான திட்ட அறிக்கை, வரைபடம் தயார் செய்யும் பணி மற்றும் திட்ட மேலாண்மை பணிக்கான ஆலோசகர்களை தேர்வு செய்ய தமிழக அரசு சார்பில் டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்படும் நிறுவனம் விரிவான திட்ட அறிக்கை மற்றும் டைடல் பூங்காவிற்கான மூன்று மாதிரி வரைபடங்களை சமர்ப்பிக்கும். இதிலிருந்து ஒரு மாதிரியை தமிழக அரசு இறுதி செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மஹாராஷ்டிரா-சத்தீஸ்கர் எல்லையில் நக்சலைட்டுகள் 4 பேர் சுட்டுக் கொலை

மும்பை, மே 24-

மஹாராஷ்டிரா-சத்தீஸ்கர் எல்லைப் பகுதியில் பாதுகாப்புப் படையினருடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் நக்சலைட்டுகள் நான்கு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மஹாராஷ்டிரா-சத்தீஸ்கர் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள கட்சிரோலி மாவட்டத்தில் நக்சல் நடமாட்டம் இருப்பதாக பாதுகாப்பு படையினருக்கு தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில், பாதுகாப்பு படையினர் மற்றும் போலீசார் இணைந்து, அந்த பகுதியில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது அங்கு மறைந்திருந்த நக்சல்கள், பாதுகாப்பு படையினரை நோக்கி சரமாரியாக சுட்டனர். பாதுகாப்பு படையினரும் பதிலடி கொடுத்தனர்.

பாதுகாப்பு படையினர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் நக்சலைட்டுகள் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அந்த இடத்தில் இருந்து துப்பாக்கி, வெடி பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அந்த பகுதியில் நக்சல்கள் பதுங்கி இருக்கலாம் என பாதுகாப்பு படையினர் சந்தேகப்படுகின்றனர். அவர்களை தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

இரண்டு நாட்களுக்கு முன்பு, சத்தீஸ்கரில் நக்சல் அமைப்பு தலைவன் பசவராஜு உட்பட நக்சலைட்டுகள் 27 பேர் பாதுகாப்புப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தங்கம் விலை சற்று சரிவு

சென்னை, மே 24-

சென்னையில் நேற்று (மே 23) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.280 குறைந்து, ஒரு சவரன் ரூ.71,520க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.35 குறைந்து, ஒரு கிராம் ரூ.8,940க்கு விற்பனையானது.

தமிழகத்தில் கடந்த 3 நாட்களுக்கு முன் (மே 21) 22 காரட் ஆபரண தங்கம் கிராம் 8930 ரூபாய்க்கும், சவரன் 71,440 ரூபாய்க்கும் விற்பனையானது. நேற்று முன்தினம் (மே 22) தங்கம் விலை கிராமுக்கு 45 ரூபாய் உயர்ந்து 8,975 ரூபாய்க்கு விற்பனையானது. சவரனுக்கு 360 ரூபாய் அதிகரித்து 71,800 ரூபாய்க்கு விற்பனையானது. இந்நிலையில், நேற்று (மே 23) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.280 குறைந்து, ஒரு சவரன் ரூ.71,520க்கு விற்பனையானது. கிராமுக்கு ரூ.35 குறைந்து, ஒரு கிராம் ரூ.8,940க்கு விற்பனையானது.

# வீழ்த்தவே முடியாத மாவீரர் பெரும்பிடுகு முத்தரையர்

## எடப்பாடி பழனிசாமி புகழாரம்

**சென்னை, மே 24-**

போர்க்களத்தில் எதிரிகளால் வீழ்த்தவே முடியாத வாகைப்பூ சூடிய மாவீரராக திகழ்ந்த பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் என்று எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி எக்ஸ் பதிவில் கூறியிருப்பதாவது:

தமிழக வரலாற்றில் பொற்கால ஆட்சியை வழங்கிய தலைசிறந்த மன்னர்களில் முதன்மையானவராக, முத்தமிழுக்கு மெய்கீர்த்தி கண்ட போற்றுதலுக்குரிய தமிழ்வேந்தராக, போர்க்களத்தில் எதிரிகளால் வீழ்த்தவே முடியாத வாகைப்பூ சூடிய மாவீரராக திகழ்ந்த பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களின் 1350வது சதய விழாவில் அவர்கள் பெரும் புகழையும் வீரத்தையும் போற்றி வணங்குகிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# த.வெ.க.வின் சின்னத்தை தேர்வு செய்வதில் தலைவர் விஜய் தீவிரம்

**சென்னை, மே 24-**

தமிழக வெற்றிக் கழகத்தின் சின்னத்தை தேர்வு செய்ய அக்கட்சியின் தலைவர் விஜய் தீவிர ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.



2026-ம் ஆண்டு நடக்கும் சட்டசபை தேர்தலை சந்திக்க தமிழக வெற்றிக் கழகம் வியூகம் அமைத்து வருகிறது. த.வெ.க. கட்டமைப்பை வலுப்படுத்தும் பணிகளில் விஜய் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். இதற்காக 234 தொகுதிகளிலும் தற்போது பூத் கமிட்டிகள் அமைக்கப்பட்டு 70 ஆயிரம் உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்தல் காலகட்டத்தில் பூத் கமிட்டி உறுப்பினர்களின் பங்குதான் முக்கியமானது. எனவே பூத் கமிட்டி மாநாடுகளை விஜய் நடத்தி வருகிறார்.

இந்த நிலையில், தமிழக வெற்றிக் கழகத்தின் சின்னத்தை தேர்வு செய்ய அக்கட்சியின் தலைவர் விஜய் தீவிர ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. பொதுமக்களிடம் எளிதாக கொண்டு சேர்க்கும் வகையில் சின்னம் இருக்க வேண்டும் என்பதை விஜய் கவனத்தில் கொண்டுள்ளதாக கூறப்படுகிறது. தேர்தல் கமிஷன் வழங்கியுள்ள சுயேச்சை சின்னத்தில் மூன்றை தேர்வு செய்து தங்களுக்கான பொது சின்னத்தை கேட்க த.வெ.க. திட்டமிட்டுள்ளது.

அவ்வாறு பொது சின்னம் ஒதுக்கப்பட்டால் அதனை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தி தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்க விஜய் திட்டமிட்டு இருக்கிறார். தி.மு.க.வுக்கு உதயசூரியன், அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை போல தனது கட்சிக்கு மக்களை எளிதில் கவரும் சின்னத்தை பெற வேண்டும் என்பதில் விஜய் உறுதியாக இருப்பதாக சொல்லப்படுகிறது.

## வர்த்தகம் முதல் சுற்றுலா வரை

# வடகிழக்கு மாநிலங்கள் பன்முகத்தன்மை கொண்டவை: பிரதமர் மோடி பெருமிதம்

**புதுடெல்லி, மே 24-**

வர்த்தகம் முதல் பாரம்பரியம் வரை, ஜவுளி முதல் சுற்றுலா வரை, வடகிழக்கு மாநிலங்கள் இந்தியாவின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட பகுதி என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.




டெல்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் நேற்று (வெள்ளிக்கிழமை) நடைபெற்ற ரைசிங் வடகிழக்கு உச்சிமாநாட்டின் தொடக்க விழாவில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "நமது இந்தியா உலகின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட நாடு என்று அழைக்கப்படுகிறது. நமது வடகிழக்கு மாநிலங்கள் இந்த நாட்டின் மிகவும் பன்முகத்தன்மை கொண்ட பகுதியாகும். வர்த்தகம் முதல் பாரம்பரியம் வரை, ஜவுளி முதல் சுற்றுலா வரை, அதன் பன்முகத்தன்மை அதன் மிகப்பெரிய பலம் வடகிழக்கு என்றால், உயிரியல் பொருளாதாரம், மூங்கில், தேயிலை உற்பத்தி, பெட்ரோலியம், விளையாட்டு மற்றும் திறன், சுற்றுச்சூழல் சுற்றுலா, கரிமப் பொருட்கள் ஆகியவற்றுக்குப் பெயர் போன பகுதி. அதோடு, வடகிழக்கு என்றால் ஆற்றல் மையம். அதனால்தான் வடகிழக்கு நமது அஷ்டலட்சுமிகள். அஷ்டலட்சுமியின் ஆசியுடன், வடகிழக்கில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் "நாங்கள் முதலீட்டிற்குத் தயாராக இருக்கிறோம், நாங்கள் தலைமைத்துவத்திற்குத் தயாராக இருக்கிறோம்." என்று கூறுகிறது.

வளர்ந்த இந்தியாவைக் கட்டியெழுப்புவதற்கு, கிழக்கு இந்தியாவின் வளர்ச்சி மிகவும் முக்கியமானது. மேலும் வடகிழக்கு கிழக்கு இந்தியாவின் மிக முக்கியமான பகுதியாகும். அரசாங்கத்தைப் பொறுத்தவரை, இந்த கிழக்கு என்பது ஒரு திசையை மட்டும் குறிக்காது. எங்களுக்கு இதன் பொருள் அதிகாரமளித்தல், செயல்படுதல், வலுப்படுத்துதல் மற்றும் மாற்றுதல் என்பதாகும். இது கிழக்கு இந்தியாவிற்கான எங்கள் அரசாங்கத்தின் கொள்கை." என தெரிவித்தார்.

பிரதமர் மோடி தொடங்கி வைத்த ரைசிங் வடகிழக்கு முதலீட்டாளர்கள் உச்சி மாநாடு, மே 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் பாரத் மண்டபத்தில் நடைபெறும். இந்த உச்சிமாநாடு வடகிழக்கு பிராந்தியத்தை வாய்ப்புகளின் பூமியாக முன்னிலைப்படுத்துவதையும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு முதலீட்டை ஈர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வக்பு திருத்த சட்ட வழக்கில்

# இடைக்கால உத்தரவு ஒத்திவைப்பு

**புதுடெல்லி, மே 25-**

வக்பு திருத்த சட்டத்துக்கு எதிரான வழக்கில் 3 நாட்களாக விவாதம் நடந்த நிலையில், இடைக்கால உத்தரவை சுப்ரீம் கோர்ட் ஒத்தி வைத்தது.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட வக்பு திருத்த சட்டம், அரசியல் அமைப்பு சட்டப்படி செல்லாது என்று அறிவிக்கக்கோரி, சுப்ரீம் கோர்ட்டில் 70-க்கு மேற்பட்ட மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. கடந்த 20-ந் தேதி, தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய், நீதிபதி அகஸ்டின் ஜார்ஜ் மசி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணை தொடங்கியது.

மனுதாரர்கள் சார்பில் வக்கீல்கள் கபில் சிபல், அபிஷேக் சிங்வி, ராஜீவ் தவான் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். 2-வது நாளாக நடந்த விசாரணையில், மத்திய அரசு சார்பில் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா ஆஜராகி வாதிட்டார். தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று முன்தினம் 3-வது நாளாக விசாரணை நடந்தது.

இதையடுத்து, இடைக்கால உத்தரவை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

அப்போது, ''பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் அரசியல் அமைப்பு சட்டப்படி செல்லும் என்ற அனுமானம் உள்ளது என்று ஏற்கனவே சொல்லி இருக்கிறேன்'' என்று தலைமை நீதிபதி கூறினார்.

கோர்ட், மரபுவழி பயன்பாடு, பத்திரம் ஆகியவை அடிப்படையில் அறிவிக்கப்பட்ட வக்பு சொத்துகளை ரத்து செய்யும் அதிகாரம், மத்திய வக்பு கவுன்சில், மாநில வக்பு வாரியங்களில் முஸ்லிம் அல்லாதவர்கள் நியமனம், வக்பு நிலம் பற்றிய கலெக்டர் விசாரணை முடியும்வரை அது வக்பு சொத்தாக கருதப்படாது என்ற சட்டப்பிரிவு ஆகிய 3 பிரச்சினைகள் மீது இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட உள்ளது.

# சிங்கம்புணரி குவாரி விபத்து: இருவர் கைது; உரிமையாளர் தலைமறைவு

**சிங்கம்புணரி, மே 24-**

சிங்கம்புணரி அருகே கல் குவாரியில் பாறை சரிந்து விழுந்த விபத்தில் 6 பேர் உயிரிழந்த சம்பவத்தில் இருவரை போலீஸார் கைது செய்தனர். தலைமறைவாக உள்ள குவாரி உரிமையாளரை தேடி வருகின்றனர்.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே மல்லாக் கோட்டையில் தனியார் கல் குவாரி உள்ளது. இங்கு மே 20-ம் தேதி 400 அடி ஆழ பள்ளத்தில் பாறை சரிந்து விழுந்ததில் பொக்லைன் ஓட்டுநர் உட்பட பல தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இதையடுத்து குவாரி உரிமத்தை தற்காலிகமாக மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் ரத்து செய்தார். இச்சம்பவம் குறித்து குவாரி உரிமையாளர் மல்லாக்கோட்டையைச் சேர்ந்த மேகவர்ணம் (48) மீது டிஎஸ்பி செல்வகுமார் தலைமையிலான எஸ்.எஸ்.கோட்டை போலீஸார் வழக்கு பதிந்தனர். மேகவர்ணம் தலைமறைவான நிலையில், அவரின் தம்பி கமலதாசன் (45), மதுரை மாவட்டம் இ.மலம்பட்டியைச் சேர்ந்த குவாரி மேற்பார்வையாளர் கலையரசன் (32) ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். மேகவர்மனை போலீஸார் தேடி வருகின்றனர்.

# இனி இனிப்பிலும் கூட 'பாக்' இல்லை: 'மைசூர் ஸ்ரீ' என மாறிய மைசூர் பாக்

**ஜெய்ப்பூர், மே 24-**

இனிப்புகளில் அதிகளவிலான விரும்பிகளைக் கொண்ட மைசூர் பாகின் பெயரை, ராஜஸ்தானின் இனிப்புக்கடைகள் பெயர் மாற்றம் செய்துள்ளது.

பஹல்காமில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தியதில், அந் நாட்டின் மீது இந்தியர்கள் பெரும் கோபத்தில் உள்ளனர்.

இந்த நிலையில், ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் உள்ள ஓர் இனிப்பகத்தில் மைசூர் பாக், கோந்த் பாக், மோத்தி பாக், ஆம் பாக் முதலான இனிப்புகளின் பெயர்களை மைசூர் ஸ்ரீ, கோந்த் ஸ்ரீ, மோத்தி ஸ்ரீ, ஆம் ஸ்ரீ என்று கடை நிர்வாகம் மாற்றிவிட்டது.

இதன் காரணம் என்னவென்று கேட்டால், ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கைக்கு ஆதரவும் தெரிவிக்கும் விதமாகவும், வாடிக்கையாளர்களுக்காவும் தான் பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்ட கடைக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பெயர்களில் பாக். என்று இருப்பதால், அதனை வாங்குவதற்கு வாடிக்கையாளர்கள் விரும்புவதில்லை என்றும் தெரிவித்தனர். இதனால்தான், பெயர்களில் இருந்த `பாக்' என்றிருந்தை மாற்றி விட்டதாகக் கூறினர்.

# கேரளாவில் கொரோனா பாதிப்பு 182 ஆக அதிகரிப்பு - 2 பேர் பலி

**திருவனந்தபுரம், மே 24-**

கடந்த 2 நாட்களில் கேரள மாநிலத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 182 ஆக உயர்ந்துள்ளது.

உலகம் முழுவதும் கடந்த 2019-ம் ஆண்டு முதல் கொரோனா வைரஸ் கோரத் தாண்டவம் ஆடியது. இந்த வைரஸ் பாதிப்பால் லட்சக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். 2022-ம் ஆண்டுவரை இதன் தாக்கம் அதிகமாக இருந்தது. அதன் பிறகு படிப்படியாக உலகம் சகஜ நிலைக்கு திரும்பியது. பின்பு கொரோனா பாதிப்பு பெரிய அளவில் காணப்படவில்லை. அதேபோல் உயிரிழப்புகளும் இல்லாமல் இருந்தது. இந்த நிலையில், கடந்த சில நாட்களாக இந்தியாவில் பல்வேறு மாநிலங்களிலும் கொரோனா தொற்று அவ்வப்போது தலைகாட்டி வருகிறது. அந்த வகையில், தமிழகத்தின் அண்டை மாநிலமான கேரளாவில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடந்த 2 நாட்களில் கேரள மாநிலத்தில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 182 ஆக உயர்ந்துள்ளது. இதற்கிடையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டு திருவனந்தபுரம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த கொல்லம் மாவட்டத்தை சேர்ந்த 59 வயது ஆண் மற்றும் திருவனந்தபுரத்தை சேர்ந்த 64 வயது ஆண் ஆகிய இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கேரளாவில் 2020-ம் ஆண்டு முதல் தற்போது வரை கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 72,141 ஆக அதிகரித்துள்ளது.

அதே சமயம், கொரோனா பரவல் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என கேரள சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. கொரோனாவால் உயிரிழந்த 2 நபர்களுக்கு ஏற்கனவே இதய நோய் உள்ளிட்ட உடல்நல பாதிப்புகள் இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

# காஷ்மீர் செல்கிறார் ராகுல்

புதுடெல்லி, மே 24-

பாகிஸ்தானில் தாககுதலில் நடைபெற்ற இடத்தையும் பாதிக்கப்பட்டோரையும் ராகுல் காந்தி சந்திக்கிறார்.

பாகிஸ்தானின் குண்டு வீச்சு தாக்குதலில் பாதிக்கப்பட்டோர் குடும்பத்தினரை சந்திக்க மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி இன்று (மே 24) ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் பகுதிக்குச் செல்கிறார். ஏப்ரல் 22 அன்று பஹல்காம் பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக பாகிஸ்தானில் உள்ள 9 தீவிரவாத முகாம்கள் மீது இந்தியா 'ஆபரேஷன் சிந்தூர்' தாக்குதலை நடத்தியது. ஆபரேஷன் சிந்தூரின் போது பாகிஸ்தான் நடத்திய பீரங்கி தாக்குதலில், அதிகம் பாதிக்கப்பட்டது ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் பகுதி ஆகும். இந்த தாக்குதலில் 27 பேர் கொல்லப்பட்டனர், 70க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த சூழலில் பாகிஸ்தான் நடத்திய குண்டு வீச்சு தாக்குதலில் பாதிக்கப்பட்டோர் குடும்பத்தினரை சந்திக்க மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி இன்று (மே 24) அன்று ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் பகுதிக்கு செல்கிறார். பஹல்காம் தாக்குதலுக்கு பின்னர் ராகுல் காந்தி ஜம்மு-காஷ்மீருக்கு செல்வது இது இரண்டாவது முறையாகும்.

இதுகுறித்து காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் வெளியிட்ட அறிக்கையில், 'சமீபத்திய பாகிஸ்தான் குண்டு வீச்சு தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரைச் சந்திக்க காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி சனிக்கிழமை (மே 24, 2025) ஜம்மு பிராந்தியத்தில் உள்ள பூஞ்சிற்கு வருகை தருகிறார். முன்னதாக அவர் ஏப்ரல் 25ம் தேதி ஸ்ரீநகருக்குச் சென்று கொடூரமான பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் காயமடைந்தவர்களையும், பாதிக்கப்பட்டோர் குடும்பத்தினரையும் ராகுல் காந்தி சந்தித்தார். அப்போது துணை நிலை ஆளுநர் மற்றும் முதல்வரையும் அவர் சந்தித்தார்'' என்று கூறினார். சமீபத்தில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரை மீண்டும் குறிவைத்த ராகுல் காந்தி, 'விஸ்வகுரு பலூன் பஞ்சர் ஆன பிறகு' வெளிநாடுகளுக்கு எம்.பிக்கள் குழுவை அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதாக கூறியிருந்தார்.

# ஒரு வாரக் காலத்திற்குள் சான்றிதழ்கள்: அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் உத்தரவு

விருதுநகர், மே 24-

சான்றிதழ்கள் கேட்டு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு ஒரு வாரக் காலத்திற்குள் சான்றிதழ்கள் வழங்க வருவாய்த்துறைக்கு அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் உத்தரவிட்டுள்ளார்.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நேற்று கலைஞரின் கனவு இல்ல திட்ட பயனாளிகளுக்கு அரசாணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கலந்துகொண்டு 107 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்ட அரசாணை வழங்கினார்.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன், "தமிழ்நாட்டில் கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் விரைவில் திறக்கப்பட உள்ள நிலையில், சாதி சான்றிதழ், வருமான வரி சான்றிதழ், உள்ளிட்ட சான்றிதழ்கள் கேட்டு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு ஒரு வாரக் காலத்திற்குள் சான்றிதழ்கள் வழங்க வருவாய்துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாணவ, மாணவியர் சான்றிதழ் பெறுவதில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் சம்பந்தப்பட்ட தாசில்தார், வருவாய் கோட்டாட்சியர் கவனத்திற்கு கொண்டு வந்தால் வேண்டிய உதவிகள் செய்யப்படும். இ-சேவை மையத்தில் மாணவ மாணவியர் சான்றிதழ் பெற முன்னுரிமை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது'' என்று அவர் கூறினார்.

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு கொலை மிரட்டல்

**சென்னை, மே 24-**

அ.தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.வேலுமணிக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பாக கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் அ.தி.மு.க. வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலாளர் தாமோதரன் புகார் மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில், ஜூலை 30-ம் தேதிக்குள் கோவையில் வெடிகுண்டு வைத்து எஸ்.பி.வேலுமணியை கொலை செய்ய திட்டமிட்டுள்ளதாகவும், கறுப்பு பணம் வைத்துள்ளதற்கான ஆதாரங்கள் உள்ளதாகவும், மே 25ஆம் தேதி ஒரு கோடி ரூபாய் தரவேண்டும் என்றும், காவல்துறைக்கு சென்றால் 3 மாதங்களில் குடும்பத்தில் 3 பேரை கொல்வோம் எனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், எஸ்.பி.வேலுமணிக்கு உரிய பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று அதில் கூறியுள்ளார்.

புகார் மனுவை பெற்றுக்கொண்ட கோவை மாநகர போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். எஸ்.பி.வேலுமணிக்கு கடிதம் மூலம் கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் கோவையில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ரஷ்ய செனட்டர்களுடன் கனிமொழி தலைமையிலான எம்.பி.க்கள் சந்திப்பு



**மாஸ்கோ, மே 24-**

தி.மு.க. எம்.பி கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் அடங்கிய தூதுக் குழு மாஸ்கோவில் ரஷ்ய வெளியுறவு விவகாரங்களுக்கான கூட்டமைப்பு கவுன்சில் குழுவின் முதல் துணைத் தலைவர் உட்பட செனட்டர்கள் பலரையும் சந்தித்தது.

இது குறித்து ரஷ்யாவில் உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், ' ரஷ்யாவின் வெளியுறவு விவகாரங்களுக்கான குழுவின் முதல் துணைத் தலைவர் ஆண்ட்ரி டெனிசோவ் மற்றும் பிற செனட்டர்களுடன் எம்.பி கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழு சந்திப்பு நடத்தியது' என்று தெரிவித்துள்ளது. முன்னதாக, ரஷ்யாவுக்கான இந்தியத் தூதர் வினய் குமார், அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவுக்கு இந்தியா - ரஷ்யா உறவுகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து விளக்கினார்.

தி.மு.க. எம்.பி கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழு நேற்று மாஸ்கோவுக்கு வந்தது. இந்தக் குழுவை ரஷ்யாவுக்கான இந்தியத் தூதர் வினய் குமார் வரவேற்றார். ரஷ்யா, ஸ்லோவேனியா, கிரீஸ், லாட்வியா மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட பல நாடுகளுக்கு இந்தக் குழு பயணம் செய்கிறது. இது ஆபரேஷன் சிந்தூர் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் அசைக்க முடியாத போராட்டத்தை எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பாக்.குடன் சண்டை நிறுத்தத்தில் 3-ம் நபர் தலையீடு இல்லை: அமைச்சர் ஜெய்சங்கர்

**புதுடெல்லி, மே 24-**

சண்டையை நிறுத்த எடுத்த முடிவு, இந்தியாவும், பாகிஸ்தானும் நேரடியாக பேசி எடுக்கப்பட்ட முடிவு என ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மத்திய வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கர், நெதர்லாந்து உள்பட 3 நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு ஒரு செய்தி நிறுவனத்துக்கு அவர் பேட்டி அளித்தார். அப்போது, இந்தியா-பாகிஸ்தான் சண்டையை நிறுத்தியதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கூறி வருவதற்கு அவர் பதில் அளித்தார்.

இது குறித்து ஜெய்சங்கர் கூறியதாவது:-

"2 நாடுகள் சண்டையில் ஈடுபடும்போது, மற்ற உலக நாடுகள் பிரச்சினையை தீர்க்க முயற்சிப்பது இயல்புதான். ஆனால், சண்டையை நிறுத்த எடுத்த முடிவு, இந்தியாவும், பாகிஸ்தானும் நேரடியாக பேசி எடுக்கப்பட்ட முடிவு. அமெரிக்காவுக்கு மட்டுமின்றி எங்களுடன் பேசிய எல்லா நாடுகளுக்கும் சொல்லிக் கொள்கிறேன். சண்டையை நிறுத்த பாகிஸ்தான் விரும்பியது. அதை எங்களிடம் சொன்னது. அவர்களிடம் நாங்கள் பேசினோம். இதுதான் நடந்தது.

அதே சமயத்தில், பாகிஸ்தான் மீண்டும் தாக்குதல் நடத்தினால், தக்க பதிலடி கொடுப்போம். அதனால்தான் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை இன்னும் முடிவடையவில்லை என்று சொல்லி இருக்கிறோம்.''

இவ்வாறு அவர் கூறினார்.

# அதானி வழக்கையும் அமலாக்கத்துறை விசாரிக்க வேண்டும்: சபாநாயகர் அப்பாவு

**நெல்லை, மே 24-**

டாஸ்மாக் விவகாரத்தை விசாரிப்பது போல், அதானி வழக்கையும் அமலாக்கத்துறை விசாரிக்க வேண்டும் என சபாநாயகர் அப்பாவு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் கூறியதாவது;-

"டாஸ்மாக் வழக்கில் அமலாகக்த்துறை எல்லை மீறி செயல்படுகிறது என்பதை சுப்ரீம் கோர்ட்டு மீண்டும் சுட்டிகாட்டியுள்ளது.

10 வருடங்களாக இருக்கும் டாஸ்மாக் வழக்கை இன்று கையில் எடுத்திருப்பது போல், 10 வருடங்களாக இருக்கும் அதானி வழக்கையும் அமலாக்கத்துறை விசாரிக்க வேண்டும்.

இரண்டு வழக்குகளையும் அமலாக்கத்துறை விசாரிக்கட்டும்.

அதன் பின்னர் அதானி எந்த தவறும் செய்யவில்லை என்று அவர்கள் அறிக்கை அளித்தால் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

'' இவ்வாறு அப்பாவு தெரிவித்தார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தவறு செய்தவர்கள் தண்டனையை அனுபவித்தே ஆக வேண்டும்.மக்களின் வரிப்பணத்தை லஞ்சமாகவோ, ஊழலாகவோ பயன்படுத்தினால், கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும்.கேப்டன் கூறியபடி, லஞ்சம், ஊழல் இல்லாத நல்ல ஆட்சி அமைய வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

**- பிரேமலதா**



ஊரக வளர்ச்சி இயக்ககத்தின் கீழ் காலியாக உள்ள பதிவுரு எழுத்தர் உள்ளிட்ட பணியிடங்களுக்கு கிட்டத்தட்ட 7 ஆண்டுகளுக்குப் பிறகு ஆள்தேர்வு நடைபெறவுள்ள நிலையில், பொதுப்பிரிவினருக்கான வயது வரம்பை 37 ஆகவும், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான வயது வரம்பை 39 ஆகவும் உயர்த்த வேண்டும்.

**- அன்புமணி**



நான் சொல்வதைக் கேட்டு நீங்கள் எனக்கு வாக்களிக்கலாம். ஆனால், உங்களை நான ஏமாற்ற மாட்டேன் என்பதற்கு என்ன உத்தரவாதம். அதனால் நான் உங்களிடம் வாக்குகள் கேட்கப்போவதில்லை. மாறாக, உங்களுக்கு வறுமையில் இருந்து மீள்வதற்கு வழி சொல்லப் போகிறேன். அதை நீங்கள் கற்றுக்கொண்டால் யாருக்கும் வாக்களிக்கலாம்.

**- பிரசாந்த் கிஷோர்**



ஆரம்ப சுகாதார நிலையங்களில் தொடங்கி மாவட்ட தலைமை மருத்துவமனை வரை நிலவும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் காலிப்பணியிடங்களை தமிழக அரசு நிரப்ப வேண்டும். அதே நேரத்தில் பொதுமக்களும் கொரோனா தொற்று தடுப்பு தொடர்பாக அரசின் வழிமுறைகளை பின்பற்ற வேண்டும்.

**- டி.டி.வி.தினகரன்**

# மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம்




**மதுரை, மே 24-**

வரும் ஜூன் 1ஆம் தேதி மதுரை உத்தங்குடி கலைஞர் திடலில் நடைபெற உள்ள மாநில பொதுக்குழு கூட்டத்தில் கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று சிறப்பிக்க வருகை தருவதையொட்டி சிறப்பான வரவேற்பு கொடுப்பது, விழாவை எழுச்சியுடன் சிறப்பாக நடத்துவது, கழக ஆக்கப் பணிகள் குறித்த மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட கழக செயல்வீரர்கள் கூட்டம் நடைபெற்றது.

மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ. தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்ட செயலாளர்மு.மணிமாறன் , வெங்கடேசன் எம்எல்ஏ,அவைத்தலைவர் பாலசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அமைச்சர் பி.மூர்த்தி பேசியதாவது:-

நடைபெற உள்ள மாநில பொதுக்குழு கூட்டத்தில் பொதுக்குழு அந்தஸ்தில் இருக்கிறவர்கள் கலந்து கொள்ள முடியும் தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் பெருமக்கள் மாவட்டக் கழகத்தினுடைய செயலாளர்கள் உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர்கள் அதே போல சட்டமன்ற உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் அந்த ஒன்றிய கழகத்தினுடைய செயலாளர்கள் பகுதி கழக செயலாளர்கள் அமைப்பாளர்கள் மாநில அணியினுடைய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அதுபோன்று அந்த பொது குழு அந்தஸ்தில் இருக்கிறவர்களை மட்டும் தான் அங்கு அனுமதிப்பார்கள் அது ஒரு காரணமாக வைத்து இங்கே அருமை அண்ணன் நம்முடைய அமைச்சராக இருந்தாலும் நம்முடைய தெற்கு மாவட்ட செயலாளர் சொன்னாங்க எந்த மாற்றமும் இல்லை.

இந்த பொதுக்குழு என்பது மிகச் சிறப்பாக நடக்கும் அவர்கள் வரலாற்றிலேயே இனிமேல் ரோடுஷோ மதுரை பார்த்து தான் மத்த ஊர்ல நட க்கும். அதுதான் கூட்டம் நிகழ்ச்சி என்பது எப்போதுமே மிகப் பிரமாண்டமாக நடத்தி இருக்கிறோம் கடைசியாக கூட ஒரே நாள்ல கூட டங்க்ஸ்டன் வெற்றி விழாவை முதலமைச்சர் தலைமையில் நடத்திக் காண்பித்தோம் திருப்புமுனை மாநாடு இந்த மாநாடு சிறக்குமோ இன்னொன்று இந்த நாடு பூரா பேசிக்கிட்டு இருக்க போது அன்றைக்கு வரக்கூடிய தேர்தலுக்கு மதுரை தான் திருப்புமுனை மாநாடு ஒத்தக்கடையில் திண்டுக்கல் அம்மாளும் சேர்ந்து நடத்தினால் அப்ப தமிழ்நாடு திரும்பி பார்க்கிற அளவுக்குத்தான் அந்த கூட்டம் மிகப்பெரிய கூட்டத்தை நடத்தி இருக்கிறோம் பல பெருமைகளுக்கு சொந்தம் மதுரை அரசியலுக்கு தலைநகரம் மதுரையில் இருந்தா சொல்லுவாங்க அதுல எந்த மாற்றமும் இல்லை.

மதுரை மாவட்ட மட்டுமல்ல தமிழ்நாடு பிரதிபலிக்கும் ஒவ்வொரு மாவட்டத்தில் போட்டி போட்டு நிகழ்ச்சி நடத்தி இருந்தால் கூட இன்றைக்கு முக்கியமான பெரிய ரோடு சோ என்பது மிகப் பெரிய வெற்றிகரமாக அமைய வேண்டும் அதற்கு மூன்று மாவட்ட கழகங்களும் இணைந்து உழைத்திட வேண்டும் என பேசினார்.

# கிழக்கு மாவட்ட அம்மா பேரவை சார்பில் கொட்டகுடியில் திண்ணைப் பிரச்சாரம்



**மேலூர், மே 24-**

கிழக்கு மாவட்ட அம்மா பேரவை சார்பில் கொட்டகுடியில் திண்ணைப் பிரச்சாரம் நடைபெற்றது.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி ஆணைக்கிணங்கவும், தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், அம்மா பேரவை செயலாளரும், மதுரை புறநகர் மேற்கு மாவட்ட செயலாளர் ஆர். பி.உதயகுமார் ஏற்பாட்டில், அமைப்பு செயலாளரும், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளரும், திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினர் வி.வி.ராஜன்செல்லப்பா அறிவுறுத்தலின் பேரில், மேலூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினரும்,மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளருமான பி.பெரியபுள்ளான்(எ)செல்வம் ஆலோசனையின் பேரில் மதுரை புறநகர் கிழக்கு மாவட்டம் மேலூர் சட்டமன்ற தொகுதி மேலூர் தெற்கு ஒன்றியம், மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட புரட்சித்தலைவி அம்மா பேரவை சார்பில் திண்ணைப் பிரச்சாரம் கொட்டகுடியில் நடைபெற்றது.

மேலூர் தெற்கு ஒன்றிய செயலாளரும், முன்னாள் யூனியன் சேர்மன் கே.பொன்னுச்சாமி தலைமை தாங்கினார். மதுரை புறநகர் கிழக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளரும், முன்னாள் எம்.எல்.ஏ கே.தமிழரசன் தலைமை தாங்கி துண்டு பிரசுரங்களை பொதுமக்களிடம் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் மேலூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கே.சி.பொன் ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றினர். நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பு சாரா ஒட்டுனர் அணி செயலாளர் அன்புச்செல்வன், மாவட்ட எம்.ஜி.ஆர் இளைஞரணி துணைச் செயலாளர் மீரா உசேன், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் திருவாதவூர் இளவரசன், கிடாரிபட்டி சுரேஷ், பனங்காடி சுப்புராமன், தெற்கு ஒன்றிய அம்மா பேரவை செயலாளர் உதயகுமார், நகர்மன்ற உறுப்பினர் திவாகர், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் அரிசி கண்ணன், மாவட்டபிரதிநிதி சீமான், வெங்கடேசன், பாசறை தலைவர் சிவா, கரிகாலன், குணாநிதி, சாலமன், கொட்டகுடி கிளை கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.




**திண்டுக்கல்லில் அரசு போக்குவரத்து பணிமனை முன்பாக போக்குவரத்து பிரிவு மண்டல செயலாளர் ஜெயராமன் தலைமையில் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் 15-வது ஊதிய ஒப்பந்தத்தை விரைந்து முடிக்க வலியுறுத்தி உள்ளிட்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி போக்குவரத்து தொழிலாளர்கள் சார்பில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அண்ணா தொழிற்சங்க செயலாளர் ஜெயராமன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தொழிற்சங்க செயலாளர் முத்தையா ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் மண்டல தலைவர் பெருமாள், பொருளாளர் பார்த்திபன், திண்டுக்கல் தெற்கு மண்டல தலைவர் முபாரக் அலி, விபத்து மண்டல பிரிவு செயலாளர் ராஜா உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

## ஒட்டன்சத்திரத்தில்
# கலைஞர் நூற்றாண்டு காய்கறி மார்க்கெட்

**ஒட்டன்சத்திரம், மே 24-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பேருந்து நிலையம் எதிர்ப்புரம் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தில் உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி முயற்சியால் ரூ.21.25 கோடி செலவில் ஏ. பி.சி.டி.என்ற அமைப்பில் 235 கடைகளுடன் அலுவலக அறைகள், ஏ.டி.எம். உணவு விடுதி, காத்திருப்பு கூடம், கண்காணிப்பு கேமரா ,குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, தரமான சாலை வசதி வாகனங்கள் உள்ளே செல்லும் வழி, வெளியே செல்லும் வழி உள்ளிட்ட கட்டமைப்புடன் புதிய காய்கனி வளாகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதற்கானகட்டுமான பணிகளுக்கு.அடிக்கல் நாட்டு விழாவினை கடந்த 23.01.2023 அன்று அமைச்சர் அர. சக்கரபாணி துவக்கி வைத்தார் விரைவில் இதனை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைக்க உள்ளார். இந்த கலைஞர் நூற்றாண்டு காய்கறி வளாகக் கடைகள் திறக்கப்பட்டால் கடந்த காலங்களைப் போல் பொதுமக்களுக்கு போக்குவரத்து வசதிக்கு இடையூறு இன்றி மார்க்கெட் வளாகத்திலேயே காய்கறிகள் ஏற்றி இறக்கும் வசதிகள் அனைத்தும் அமைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அருப்புக்கோட்டையில்
# ஜமாபந்தி: பொதுமக்களிடம் வருவாய் கோட்டாட்சியர் மனுக்களை பெற்றார்



**அருப்புக்கோட்டை, மே 24-**

அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாய கணக்குகளை தணிக்கை செய்யும் பணி(ஜமாபந்தி) மேற்கொள்ளப்பட்டது. வருவாய் கோட்டாட்சியர் கனகராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த ஜமாபந்தி நிகழ்ச்சியில் வருவாய்துறை கணக்குகள் சரிபார்க்கப்பட்டது. இதில் கோட்டாட்சியர் கனகராஜ் கணக்குகளை சரிபார்த்தார். மேலும் அதேபோல பொதுமக்கள் ஏராளமானோர் இந்த ஜமாபந்தியில் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை கோட்டாட்சியரிடம் வழங்கினர். மனுக்களை பெற்றுக் கொண்ட கோட்டாட்சியர் கனகராஜ் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். இந்த ஜமாபந்தி நிகழ்ச்சியில் வட்டாட்சியர் செந்தில் வேல், தலைமை நில அளவையாளர் முத்து மாடத்தி உள்ளிட்ட வருவாய்துறை அதிகாரிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# ஆயுள் காப்பீடு மூலம் பெண்களுக்கான நிதி நிலைத்தன்மையை உருவாக்க தேவையான சில அத்தியாவசிய குறிப்புகள்

**சென்னை, மே 24-**

பெண்களைப் பொறுத்தவரை ஆயுள் காப்பீட்டின் மிக முக்கியமான நன்மைகளில் ஒன்று, அவர்களுக்கு அது மிகவும் மலிவாக இருப்பதுதான். பெண்களின் ஆயுட்காலம் ஆண்களை விட அதிகமாக இருப்பது பல ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது அதன் காரணமாக, ஆண்களை விட பெண்களுக்கான ஆயுள் காப்பீட்டு பிரீமியம் கணிசமான அளவில் குறைவாகவே இருக்கிறது. ஒரு விரிவான காப்பீட்டைப் பெறுவதற்கு, ஒரு நீண்ட கால ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை பெறுவது என்பதே மிகவும் மலிவான வழியாக இருக்கும் என்று அடிக்கடி ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.பெண்களைப் பொறுத்தவரை ஆயுள் காப்பீட்டின் மிக முக்கியமான நன்மைகளில் ஒன்று, அவர்களுக்கு அது மிகவும் மலிவாக இருப்பதுதான். பெண்களின் ஆயுட்காலம் ஆண்களை விட அதிகமாக இருப்பது பல ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது அதன் காரணமாக, ஆண்களை விட பெண்களுக்கான ஆயுள் காப்பீட்டு பிரீமியம் கணிசமான அளவில் குறைவாகவே இருக்கிறது.

பெண்களைப் பொறுத்தவரை ஆயுள் காப்பீட்டின் மிக முக்கியமான நன்மைகளில் ஒன்று, அவர்களுக்கு அது மிகவும் மலிவாக இருப்பதுதான். பெண்களின் ஆயுட்காலம் ஆண்களை விட அதிகமாக இருப்பது பல ஆய்வுகளின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது அதன் காரணமாக, அவர்களுக்கான ஆயுள் காப்பீட்டு பிரீமியம் ஆண்களை விட கணிசமான அளவில் குறைவாகவே இருக்கிறது. ஒரு விரிவான காப்பீட்டைப் பெறுவதற்கு, நீண்ட கால ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை பெறுவது மிகவும் மலிவான வழியாக இருக்கும் என்று அடிக்கடி ஆலோசனை வழங்கப்பட்டுவருகிறது.அத்துடன் சேர்த்து, வயது அதிகரிக்க அதிகரிக்க காப்பீட்டு பிரீமியத் தொகையும் அதிகரிக்கும் என்பதால் இளம் வயதிலேயே காப்பீட்டை பெறுவது வயது அடிப்படையில் பிரீமியத் தொகையை குறைக்க உதவும் என்று சீஃப் டிஸ்ட்ரிப்யூஷன் ஆபீசர், ஏடல்வைஸ் லைஃப் இன்சூரன்ஸ் ஆசிரியர் அனுப் சேத் கூறினார்.

# மாணவர்களின் புத்திகூர்மையை ஊக்குவிக்கும் கிளாஸ்மேட்-ன் எடுகேம்ஸ் இன்பினிட்டி புதிர் போட்டி

**திருச்சி, மே 24-**

இந்தியாவின் முன்னணி நோட்புக் மற்றும் எழுதுபொருள் தயாரிப்பு பிராண்ட்களில் ஒன்றான ஐடிசி நிறுவனத்தின் கிளாஸ்மேட், மாணவர்களின் புத்திகூர்மையை ஊக்குவிக்கும் வகையில் எடுகேம்ஸ் இன்பினிட்டிஎன்னும் புதிர் போட்டியை கிராண்ட் மாஸ்டர்கள் பிரக்ஞானந்தா, வைஷாலி உடன் இணைந்து நடத்த உள்ளது. கல்வியை ஒரு மகிழ்ச்சிகரமான அனுபவமாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த புதிர் போட்டியை கிளாஸ்மேட் அறிவித்துள்ளது. இதில் பங்கேற்று வெற்றி பெறுபவர்கள் ஹாங்காங் டிஸ்னிலேண்டை சுற்றிப் பார்க்க அழைத்துச் செல்லப்பட இருக்கிறார்கள்.

இந்த போட்டியின் முக்கிய நோக்கம், கற்றல் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.மேலும் மாணவர்கள் தங்கள் கல்வியை வேடிக்கையான முறையில் கற்க வேண்டும் என்பதாகும். அந்த வகையில், தலைமுறை தலைமுறையாக மாணவர்களால் மிகவும் விரும்பப்படும் கிளாஸ்மேட் நோட்புக்கின் கடைசிப் பக்கத்தில் எடுகேம்ஸ் இன்பினிட்டி புதிர் போட்டி இடம்பெறும். மாணவர்கள் நோட்புக்கின் கடைசிப் பக்கத்தை ஸ்கேன் செய்து ஒவ்வொரு நாளும் ஒரு புதிய விளையாட்டை விளையாடலாம்.இந்த போட்டி குறித்து மாணவர்கள் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வரும் 24-ந்தேதி இந்தியா முழுவதும் உள்ள 30 நகரங்களில் கிளாஸ்மேட் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளது. இதன் மூலம் ஒரு கிளாஸ்மேட் நோட்புக்கை வாங்கி இந்த புதிர் போட்டியில் மாணவர்களை பங்கேற்க அழைப்பு விடுக்க உள்ளது.

# ஸ்ரீவில்லிபுத்தூர் வைத்தியநாத சுவாமி கோவிலில் வருஷாபிஷேக விழா



**விருதுநகர், மே 24-**

ஸ்ரீவில்லிபுத்தூர் மடவார் வளாகம் வைத்தியநாதசுவாமி திருக்கோவிலில் மகா கும்பாபிஷேக விழா கடந்த 2024 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கும்பாபிஷேகம் நடைபெற்று . ஒரு வருட காலம் பூர்த்தியாகிதை முன்னிட்டு வருஷாபிஷேக விழா நேற்று நடைபெற்றது.

காலையில் உற்சவ மூர்த்திகளான வைத்தநாதசுவாமி, சிவகாமிஅம்பாள், விநாயகர், முருகன், ஆகிய சுவாமிகளுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து யாகசாலையில் வேள்வி கும்பபூஜைகள் ஆகம முறைப்படி நடைபெற்று சாமிகளுக்கு புனித நீர் அபிஷேகம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து மூலவருக்கும் சிவகாமி அம்பாளுக்கும் சிறப்பு அபிஷேகம் ஆராதனை அலங்காரம் நடைபெற்றது. ஆகம பூஜைகளை ரகு என்ற கைலாச பட்டர், ரமேஷ் என்ற சுவாமிநாத பட்டர், கல்யாண விக்னேஷ் பட்டர்,தியாகராஜ பட்டர்,பாலாஜி பட்டர் ஆனந்த் விஜய் பட்டர்,தியாகராஜ பட்டர்,வைத்தியநாத பட்டர் ஆகியோர் பூஜைகளை நடத்தினர்.

இந்நிகழ்ச்சியின் உபயதார் ஸ்ரீவில்லிபுத்தூர் பாலாஜி டிரைவிங் ஸ்கூல் அதிபர் மகேஸ்வரன் குடும்பத்தார் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். முடிவில் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை கோவில் தக்கார் செள.சக்கரைஅம்மாள், செயல் அலுவலர் செ.முத்துமணிகண்டன் மற்றும் கோவில் அலுவலர்களும் திருக்கோவில் பணியாளர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

## அரசு பேருந்துகள் போல்
# தனியார் பேருந்துகளிலும் தானியங்கி கதவுகள் அமைக்க பயணிகள் கோரிக்கை

**திருமங்கலம், மே 24-**

தமிழ்நாட்டில் இயங்கிடும் அரசுப் பேருந்துகள் போன்று தனியார் பேருந்துகளிலும் பயணிகளின் பாதுகாப்பு கருதி தானியங்கி கதவுகள் அமைத்திட வேண்டும் என சமூக ஆர்வலர்களும், பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு புறநகர் மற்றும் நகர்ப்புற அரசுப் பேருந்துகளில் தானியங்கி கதவுகள் அமைக்கப்படாததால் பயணிகள் தவறி விழுந்து இறந்திடும் விபத்துக்கள் அதிகரித்து வந்தது.இதையடுத்து பயணிகளின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையில் புதிய மற்றும் பழைய அரசுப் பேருந்துகளுக்கு கதவுகள் அமைக்கப்பட்டுள்ளது.குறிப்பாக சென்சார் மூலம் இயங்கிடும் புதிய அரசுப் பேருந்துகளில் கதவு அடைக்கப்பட்ட பின்னர் தான் பேருந்து கிளம்பிடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.புதிய மற்றும் பெரும்பாலான பழைய அரசுப் பேருந்துகளில் தற்போது தானியங்கி கதவுகள் அமைக்கப்பட்டு விட்டதால் பயணிகள் தவறி விழுந்து உயிரிழக்கும் நிகழ்வுகள் பெரிதும் குறைந்து விட்டது.

இந்நிலையில் தமிழ்நாட்டில் அதிலும் குறிப்பாக தென் மாவட்டங்களில் இயங்கிடும் தனியார் பேருந்துகளில் கதவுகள் அமைக்கப்படாததால் பயணிகள் தவறி விழுந்து உயிரிழந்திடும் நிகழ்வுகள் அதிகரித்த வண்ணம் உள்ளது.எனவே தனியார் பேருந்துகளில் பயணிகளின் பாதுகாப்பு கருதி கதவுகள் அமைத்திட தமிழக அரசின் போக்குவரத்து துறை உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டும்.இல்லாவிடில் தனியார் பேருந்துகளில் தானியங்கி கதவுகள் அமைப்பது குறித்து சென்னை உயர்நீதிமன்றம் தானாக முன்வந்து பொதுமக்கள் மற்றும் பயணிகள் நலன் கருதி உரிய உத்தரவுகளை பிறப்பித்திட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பெருங்கரை ஆதிசக்தி ராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் வைகாசி உற்சவ விழா



**பரமக்குடி, மே 24-**

பரமக்குடி அருகே பெருங்கரை கிராமத்தில் உள்ள ஆதிசக்தி ராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலில் வைகாசி உற்சவ விழா நடந்து வருகிறது. அதையொட்டி அம்மன் தினமும் பல்வேறு அலங்காரங்களில் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.பின்பு பார்வதி திருக்கல்யாணம் நிகழ்ச்சி நடந்தது. அன்று இரவு அம்மன் பூப் பல்லக்கில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.

இறுதியாக பால்குட திருவிழா நடந்தது.கோவிலின் நிறுவனர் விஜயேந்திர சுவாமி தலைமையில் பெருங்கரை வைகை ஆற்றில் இருந்து ஏராளமான ஆண்களும் பெண்களும் நேர்த்திக்கடனாக பால்குடம், இளநீர் காவடி, கரகம் எடுத்து ஊர்வலமாக வந்து அம்மனுக்கு நேர்த்திக் கடன் செலுத்தினர்.

பின்பு பக்தர்கள் சுமந்து வந்த பாலால் சாமிக்கு அபிஷேகம் செய்யப்பட்டு சிறப்பு அலங்காரமும் தீபாராதனையும் நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

## ராமநாதபுரம் மாவட்டத்தில்
# முதல்வரின் காப்பீடு திட்ட அட்டை பெற சிறப்பு முகாம்

**ராமநாதபுரம், மே 24-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்ட அட்டை பதிவு செய்யும் சிறப்பு முகாம் கிராம வாரியாக மே 3 முதல் ஜூலை 16 வரை ஊராட்சி மன்ற அலுவலகங்களில் நடைபெற்று வருகிறது. இம்முகாமானது வருகிற 27-ம் தேதி அன்று கீழக்கரை தாலுகாவில் உள்ள பெரியபட்டிணம், 28-ம் தேதி அன்று திருப்புல்லாணி, 29-ம் தேதி வண்ணாங்குண்டு, 30.05.2025 அன்று ரெகுநாதபுரம், 31-ம் தேதி மாயாகுளம் ஆகிய கிராமங்களில் உள்ள ஊராட்சி மன்ற அலுவலகங்களில் நடைபெற உள்ளதால், மேற்கண்ட கிராமங்கள் மற்றும் அதை சுற்றியுள்ள கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெறலாம்.

இம்முகாமிற்கு பதிவு செய்ய வருவோர் குடும்ப அட்டை நகல் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆதார் அட்டை நகல் எடுத்து வர வேண்டும் எனவும் இது வரை பதிவு செய்யாமல் இருப்பவர்கள் கலந்து கொண்டு இவ்வாய்பை பயன்படுத்தி பதிவு செய்து கொள்ளுமாறும், மேலும் விவரங்களுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் மாவட்ட திட்ட அலுவலர் 7373004588 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பயன்பெறலாம். இந்த தகவலை மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.



தேனி மாவட்டம் பெரியகுளம் வட்டாசியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வருவாய் தீர்வாயம் 2-ம் நாள் நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

## தேசிய அளவிலான கூடோ சாம்பியன்ஷிப் போட்டி:
# வெற்றி பெற்றவர்களுக்கு மதுரையில் உற்சாக வரவேற்பு



**மதுரை, மே 24-**

மகாராஷ்டிரா மாநிலத்தில் தேசிய அளவில் நடைபெற்ற கூடோ சாம்பியன்ஷிப் போட்டிகள் - வெற்றி பெற்ற வீரர்களுக்கு மதுரை ரயில் நிலையத்தில் உற்சாக வரவேற்பு

மகாராஷ்டிரா மாநிலம், பூனே மாநிலம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் ஆண்கள் ராணுவப் பள்ளியில் 3வது தேசிய அளவிலான கூடோ சாம்பியன்ஷிப் போட்டிகள் கடந்த 16ஆம் தேதி முதல் 22ஆம் தேதி வரை நடைபெற்றது.

போட்டிகளில் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்றனர். தமிழகத்திலிருந்து 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். போட்டிகள் 15, 16, 21 உள்ளிட்ட வயதுக்குட்பட்ட பிரிவுகளின் கீழ் போட்டிகள் நடைபெற்றது.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு தங்கம், வெள்ளி, வெண்கல பதக்கங்கள் வழங்கப்பட்டது.

இப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற வீரர்கள் விரைவில் நடைபெற உள்ள உலக கூடோ சாம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கு பெற தேர்வு பெற்று உள்ளனர்.

மேலும் இப் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு விளையாட்டு துறையில் அரசின் அங்கீகாரமான பார்ம் 2 வழங்கப்பட உள்ளது.

இதன் மூலம் அவர்கள் அரசு பணியில் உள்ள வேலை வாய்ப்புகளிலும், கல்லூரிகளில் சேரும் பொழுது இதன் மூலம் அவர்களது கல்வி கட்டண சலுகைகள் பெற முடியும். நடைபெற்ற 3வது தேசிய அளவிலான கூடோ போட்டியில் மதுரை சேர்ந்த சத்தியமூர்த்தி தங்கப்பதக்கமும், யுவான் முத்துக்குமார் வெண்கல பதக்கமும், வென்றனர். மேலும், வெற்றி பெற்ற மற்றும் பங்கேற்ற வீரர்கள் இன்று காலை மதுரை மாவட்ட கூடோ விளையாட்டு சங்கத்தின் பயிற்சியாளர் மகாபிரபு தலைமையில் மதுரை ரயில் நிலையத்தில் வந்தடைந்தனர்.

அவர்களுக்கு பயிற்சியாளர்கள், பெற்றோர்கள், நண்பர்கள் பொன்னாடை அணிவித்து உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்.

**மழைத்துளி**
**மண்ணின்**
**உயிர்துளி**

# தமிழ்நாட்டில் எம்எஸ்எம்இ கடன்களில் 43% உற்பத்தித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது; தனியார் வங்கிகள் 39% பங்களிப்போடு முன்னிலை

**மதுரை, மே 24-**

டிரான்ஸ்யூனியன் சிபில் மற்றும் இந்திய சிறுதொழில் மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் சமீபத்திய எம்எஸ்எம்இ பல்ஸ் அறிக்கை (மே 2025) படி, எம்எஸ்எம்இ கடன் செயல்பாட்டின் ஒரு சக்தி வாய்ந்த இடமாகத் தமிழ்நாடு தொடர்கிறது. மதிப்பு அடிப்படையில் 43% கடன்கள் உற்பத்தித் துறைக்கு வழங்கப்படுகின்றன. மார்ச் 2025 நிலவரப்படி ஆண்டுக்கு ஆண்டு 13% வளர்ச்சியடைந்த இந்தியாவின் ரூ.35.2 லட்சம் கோடி எம்எஸ்எம்இ வணிகக் கடன் துறையில், தமிழ்நாடு மிக முக்கிய பங்களிப்பாளராக உள்ளது. தொழில்துறை மற்றும் ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்களுக்கு வலுவான ஆதரவை வழங்கும் தனியார் வங்கிகள் தமிழ்நாட்டின் எம்எஸ்எம்இ கடன் சுற்றுச்சூழல் அமைப்பில் 39% பங்கைக் கொண்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. முக்கிய தொழில்துறை மாவட்டங்களில், கடன் வழங்கும் முறைகள் பன்முகத்தன்மை மற்றும் ஆழம் இரண்டையும் பிரதிபலிக்கின்றன. கோயம்புத்தூரில் வலுவான கடன் செயல்பாடு உள்ளது, தனியார் வங்கிகள் எம்எஸ்எம்இ கடன்களில் 45% மற்றும் உற்பத்திக்கு அனுப்பப்படும் கடன்களில் 48% பங்களிக்கின்றன. சேலம் மற்றும் தொழில்துறை கலப்பின மையமான சென்னையில், தனியார் வங்கிகளிடமிருந்து 44% கடன்கள் கிடைக்கின்றன, 31% கடன் உற்பத்திக்கு 26% நீண்ட கால மூலதனத்திற்கும் செல்கிறது. ஜவுளி ஏற்றுமதி மையமான திருப்பூர் ஆனது 75% எம்எஸ்எம்இ கடன் உற்பத்தியில் கவனம் செலுத்துகிறது - பேக்கிங் கிரெடிட் (36%) - மற்றும் 46% கடன் வாங்குபவர்கள் குறைந்த ஆபத்து என மதிப்பிடப்பட்டுள்ளனர். மதுரையில் கடன் வழங்கும் முறை சற்று மாறுகிறது - வர்த்தகம் 36% ஆகவும், பொதுத்துறை வங்கிகள் 34% பங்கைக் கொண்டுள்ளன. இந்திய சிறு தொழில் மேம்பாட்டு வங்கியின் தலைவரும் நிர்வாக இயக்குநருமான. மனோஜ் மிட்டல் கூறியதாவது:

"வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் எம்எஸ்எம்இ துறை முக்கிய பங்கு வகிக்கிறது மற்றும் ஏற்றுமதி வளர்ச்சிக்கு பங்களிக்கிறது. பல ஆண்டுகளாக இந்தத் துறைக்கான கடன் செயல்பாடுகளை மேம்படுத்தியிருந்தாலும், இந்தத் துறை இன்னும் நிவர்த்தி செய்யக்கூடிய கடன் இடைவெளியையும் கொண்டுள்ளது. எம்எஸ்எம்இகளுக்கு ஆதரவளிப்பது துறையின் வளர்ச்சிக்கு உதவும் மற்றும் நமது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவும். என்றார்.

டிரான்ஸ்யூனியன் சிபில் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி பவேஷ் ஜெயின் கூறியதாவது: " எம்எஸ்எம்இ -க்கள் நிலையான வளர்ச்சியை அடைய, கடன் மேலாண்மையில் முறையான கடன் மற்றும் வழிகாட்டுதலை அணுகுவதில் உதவி பெறுவது அவசியம். கூடுதல், வணிகச் சூழ்நிலைகள் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் இந்த நிறுவனங்களை பெருமளவில் பாதிக்கின்றன. பெரும்பாலும் பாதகமான சூழ்நிலைகளைத் தாங்கத் தேவையான நிதி இருப்பு அல்லது ஆதரவை பொதுவாக நிறுவனங்கள் கொண்டிருப்பதில்லை.

எனவே, இந்தத் துறைக்கு ஆதரவை வழங்குவதும், பயனுள்ள நிதி மேலாண்மைக்கான கருவிகளுடன் அவற்றைச் சித்தப்படுத்துவதும் மிக முக்கியம்." என்று கூறினார்.

# ஜேஎஸ்டபிள்யூ எம்ஜி மோட்டார் இந்தியா இவி பிரிவில் எம்ஜி விண்ட்சர் ப்ரோ வேரியண்ட்டை அறிமுகப்படுத்துகிறது

**சென்னை, மே 24-**

இந்திய மின்சார வாகன துறையில் தனது வேகத்தைத் தொடரும் ஜேஎஸ்டபிள்யூ எம்ஜிமோட்டார் இந்தியா இன்று எம்ஜி விண்ட்சர் பிரத்யேக ப்ரோ வகையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது அதன் மின்சார வாகன சலுகைகளை மேலும் விரிவுபடுத்துகிறது. எம்ஜி விண்ட்சர் பிரத்யேக ப்ரோ வகை ரூ 17,24,800 எக்ஸ்-ஷோரூம் விலையிலும் பாஸ் விலை ரூ. 12.24L + ரூ. 4.5/கிமீ யிலும் கிடைக்கும். இன்று முதல், வாடிக்கையாளர்கள் இந்த காரை அருகிலுள்ள எம்ஜி டீலர்ஷிப்பில் ரூ. 11,000 செலுத்தி முன்பதிவு செய்யலாம், மேலும் இதன் வாகனங்களின் டெலிவரி ஜூன் முதல் வாரத்தில் தொடங்கும். ஆடம்பரத்தையும் நடைமுறைத்தன்மையையும் ஒன்றாகக் கொண்டு வரும் இந்த பிரத்யேக ப்ரோ வகை, கவலையற்ற நீண்ட தூர பயணத்திற்கான பெரிய பேட்டரி பேக்குடன் எம்ஜி விண்ட்சர் கையொப்ப வசதியை வழங்குகிறது.

இது குறித்து ஜேஎஸ்டபிள்யூ எம்ஜிமோட்டார் இந்தியாவின் விற்பனைத் தலைவர் ராகேஷ் சென் கூறுகையில், எம்ஜி விண்ட்சர் ப்ரோ-விற்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. அறிமுகப்படுத்தப்பட்ட 24 மணி நேரத்திற்குள் 8,000க்கும் மேற்பட்ட முன்பதிவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதுவே மிகப்பெரிய முன்பதிவு எண்ணிக்கையாகும். இப்போது சிறந்த வகை நிறுவப்பட்ட நிலையில், பிரத்தியேக எம்ஜி விண்ட்சர் ப்ரோ மாறுபாட்டை அறிமுகப்படுத்துவதன் மூலம் எம்ஜி விண்ட்சரின் அணுகலை விரிவுபடுத்துகிறோம், பிரீமியம் வசதி மற்றும் வசதியுடன் ஒரு பெரிய பேட்டரி பேக்கையும் வழங்குகிறோம். எம்ஜி விண்ட்சர் எக்ஸ்க்ளூசிவ் ப்ரோ, எதிர்காலத்திற்கான ஏரோ கிளைடு வடிவமைப்பு மொழியைக் கொண்டுள்ளது மற்றும் அதன் நம்பகத்தன்மைக்கு பெயர் பெற்ற எம்ஜி இன் குளோபல் ஸ்மார்ட் எலக்ட்ரிக் பிளாட்ஃபார்மில் கட்டமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 / 94

# கைலாசநாதர் கோவில் வைகாசி திருவிழா



**நத்தம்,மே 24-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்-கோவில்பட்டியில் பிரசித்திபெற்ற கைலாசநாதர்- செண்பகவல்லி அம்மன் கோவில் உள்ளது.இந்த கோவிலில் வைகாசி பெருந்திருவிழா வருகிற 31-ம் தேதி காலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. இதையொட்டி நேற்று காலை முகூர்த்தக்கால் நடும் விழா நடந்தது.இதில் மாவிலைகளால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜைகள்,தீபாராதனைகளுக்கு பின் முகூர்த்தக்கால் கோவில் முன்பாக நடப்பட்டது. தொடர்ந்து மூலவர் கைலாசநாதர்- செண்பகவல்லி அம்மனுக்கு 16 வகையான சிறப்பு அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்று வட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை முன்னாள் கோவில் அறங்காவலர்கள் சிவலிங்கம், முத்துகுமார்சாமி உள்ளிட்ட இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகளும், கோவில் குருக்களும் செய்து வருகின்றனர்.

# டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4 தேர்வுக்கு விண்ணப்பிக்க இன்று கடைசி நாள்

**சென்னை, மே 25-**

டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4 தேர்வுக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் இன்றுடன் (மே 24) முடிவடைகிறது.

தமிழ்நாட்டில் அரசுத் துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக பல்வேறு பிரிவுகளில் போட்டித் தேர்வு நடத்தப்படுகிறது. இதில் குறைந்தபட்ச கல்வித்தகுதியுடன் கிராம நிர்வாக அலுவலர், இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், வனக்காப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பதவிகளில் 3,935 பணியிடங்களை நிரப்ப கடந்த மாதம் 25 ஆம் தேதி அறிவிக்கை வெளியிடப்பட்டது.

விருப்பமுள்ளவர்கள் www.tnpsc.gov.in என்ற அதிகாரபூர்வ இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இணையத்தில் விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் இன்று (மே 24) முடிவடைகிறது. கடைசி நேரத்தில் விண்ணப்பம் செய்யும்போது இணைய பிரச்னைகள் வர வாய்ப்புள்ளதால் விரைந்து விண்ணப்பிக்குமாறு ஏற்கெனவே டி.என்.பி.எஸ்.சி. கூறியுள்ளது. எனினும் மே 24(சனிக்கிழமை) நள்ளிரவு 11.59 வரை டி.என்.பி.எஸ்.சி. இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம், விண்ணப்பத்தில் திருத்தங்களைச் செய்ய மே 29 முதல் 31 ஆம் தேதி வரை அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. இந்த குரூப் 4 தேர்வு ஜூலை 12-ஆம் தேதி காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரை நடைபெறவுள்ளது.

**ஆவணம் காணவில்லை**

இதன் மூலம் சகலமானவர்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால், எனது கட்சிக்காரரான தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சி, ஹைவேவிஸ், வெண்ணியார் அஞ்சல், A காலனி, கதவு எண்.35/12-ல் வசித்து வரும் சுருளிவேல் அவர்களின் குமாரர், பிரியதர்சன் அவர்களின் தகவலின்பேரில், இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில் எமது கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட சொத்திற்கான மூல அசல் ஆவணமான சின்னமனூர் சார்பதிவாளர் அலுவலக பத்திர எண். 5864/2011- நிர் கிரைய ஆவணம் கடந்த 25.03.2025-ம் தேதி சின்னமனூர் பேருந்து நிலையம், அருகில் ஜெராக்ஸ் எடுத்து வீட்டிற்க்கு திரும்பும் போது தொலைந்துவிட்டது, இது சம்மந்தமாக கடந்த 25.03.2025-ம் தேதி சின்னமனூர் காவல்நிலையத்திற்கு இணையதளம் மூலம் புகார் செய்துள்ளார். மேற்படி தொலைந்து போன அசல் ஆவணத்தினை வைத்து, யாரேனும் வில்லங்கங்கள் செய்தால் அது எமது கட்சிக்காரரை கட்டுப்படுத்தாது என்றும், மேற்படி ஆவணத்தினை யாரேனும் எடுத்தாலோ, அல்லது கண்டுப்பிடித்தாலோ, 5 நாட்கள் காலத்திற்குள் எமது கட்சிக்காரருக்கோ அல்லது கீழ்கண்ட என் அலுவலக முகவரிக்கோ, தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

S.பூபதி., B.A., B.L., வழக்கறிஞர்
No.465-C, முதல் தளம், ஸ்ரீஸ்ரீனிவாசா காம்பளக்ஸ்,
பெரியகுளம் ரோடு, தேனி. செல்:9944966446.

**பட்டா மாறுதல்... ஆட்சேபனை கோருதல்... பொதுஅறிவிப்பு**

பழனி வட்டம், மேற்கு ஆயக்குடி கிராமம், பட்டா எண் 1230ல் புல எண் : 208/4 – 0.19.00 ஹேர்ஸ் - ராமசாமி நாயுடு மகன் வெங்கிட ராமசாமி நாயுடு – 1 , முத்துச்சாமி நாயுடு மகன் கிருஷ்ணசாமி நாயுடு – 2, ஆகிய இருவரின் பெயரில் பட்டா தாக்கலாகி உள்ளது. மேற்கண்ட நபர்கள் மேற்கண்ட சொத்திற்கான எவ்வித வகையிலும் பாத்தியம், அனுபவம், மற்றும் உரிமை இல்லாதவர்கள் , மனுதாரராகிய நான் சுப்பிரமணி த.பெ.கருப்பணன் ஆகிய , நான் கடந்த சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவித்து நிலவரி செலுத்தி வருகிறேன் . எனது பெயரில் பட்டா மாறுதல் கோரி பழனி வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளேன். இச்சொத்தின் மீது எனது பெயரில் பட்டா மாறுதல் கோரி விண்ணப்பம் செய்து விசாரணை செய்வதில் ஆட்சேபனை உள்ளவர்கள் உடன் வட்டாட்சியர் அலுவலகத்தில் உரிய ஆதாரங்கள் மற்றும் ஆவணங்களுடன் நேரில் வந்து தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம் என்பதற்கான பொது அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

இவண்,
திரு.சுப்ரமணி, த.பெ.கருப்பணன்,
13வது வார்டு, புது ஆயக்குடி, மேற்கு ஆயக்குடி,
பழனி வட்டம்., செல் : 6374636162

**காணவில்லை**

நான் எனது வீட்டில் இருந்து கடந்த 14.05.2025- ந் தேதி அன்று மேலூருக்கு இரு சக்கர வாகனத்தில் சென்றபோது மேலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் எனது தாயார் பனையம்மாள் பெயரில் பதியப்பட்ட ஆவண எண்: 3450/1986 என்ற அசல் கிரைய பத்திரத்தை ஜெராக்ஸ் எடுப்பதற்காக மேலூர் தாலுகா ஆபிஸ் எதிரே உள்ள ஜெராக்ஸ் கடையில் எடுக்கும் போது காணாமல் போய்விட்டது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. கண்டுபிடித்து தந்து உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முகவரி:
A.ராஜங்கம், S/o. அரசப்பன்,
வாச்சாம்பட்டி, கீழவளவு கிராமம்,
மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.
செல்: 9585098007

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம்,
இராமநாதபுரம்
அகமது மரியம்,
க/பெ. சுல்தான் இப்ராகிம்,
12/127, சாலைத்தெரு,
கீழக்கரை வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்
.......... மனுதார்
எதிர்
வட்டாட்சியர் அவர்கள்,
பிறப்பு இறப்பு பதிவு அதிகாரி,
வட்டாட்சியர் அலுவலகம்,
கீழக்கரை.
.......எதிர்மனுதார்
அறிவிப்பு
எனது மகள் ஹமீது யூசுப் சாஹிப் என்பவர் மேற்கண்ட முகவரியில் உள்ள வீட்டில் வைத்து கடந்த 19.05.1980 அன்று பிறந்தான். அப்போது எங்களது அறியாமையின் காரணமாக எனது மகன் ஹமீது யூசுப் சாஹிப் பிறப்பை பதிவு செய்யாமல் விடுபட்டு போனது. எனவே, எனது மகனின் பிறப்பை எதிர்மனுதாரர் அலுவலக பிறப்பு இறப்பு பதிவேட்டில் பிறப்பை பதிவு செய்ய உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துகொள்ளலாம் என இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.
அகமது மரியம்,
மனுதாரர்.

வருவாய் கோட்டாட்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
மதுரை
ந.க.எண்.3200/2025/அ2
V.ராமன், த/பெ. லேட்.வேலு,
3/145, அகமுடையார் தெரு,
கொட்டாம்பட்டி கிராமம்,
மேலூர் தாலுகா,
மதுரை மாவட்டம்.
..மனுதாரர்
எதிர்
வருவாய் கோட்டாடச்சியர் மற்றும்
உட்கோட்ட நடுவர் நீதிமன்றம்
மதுரை.
....எதிர்மனுதாரர்
அறிவிப்பு
மேற்படி நிர் மனுதாரரின் தகப்பனாரான மு.வேலு தந்தை கருப்பணன் என்பவர் 24-11-2021 ம் தேதி ஷை முகவரியில் இறந்துவிட்டதை பிறப்பு மற்றும் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மதுரை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவரிடம் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் பதிவு செய்ய மேற்படி இறப்பு சம்பந்தமாக யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் எதிர்வரும் 30 தினங்களுக்குள் மதுரை வருவாய் கோட்டாட்சியர் மற்றும் உட்கோட்ட நடுவர் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி ஆட்சேபணையை தெரிவித்து கொள்ளலாம். தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படும் என்பதை அறியவும்.
வருவாய் கோட்டாட்சியர்
மதுரை.

# டெல்லி: தமிழக அரசின் கட்டுமானப்பணிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் ஆய்வு

**புதுடெல்லி, மே 24-**

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின், புதுடெல்லியில் நடைபெற்றுவரும் விருந்தினர் இல்லம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதுதொடர்பாக வெளியிடப்படுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- இன்று நடைபெற உள்ள நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், நேற்று (23.5.2025) புதுடெல்லி சென்றடைந்தார். புதுடெல்லி, சாணக்யபுரியில் தமிழ்நாடு அரசின் சார்பில் புதிதாக கட்டடப்பட்டு வரும் விருந்தினர் இல்லம் மற்றும் அலுவலர் குடியிருப்பு கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை தமிழ்நாடு முதல்வர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுடெல்லி, சாணக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தின் பழைய கட்டிடங்களை முழுவதுமாக இடித்து மறுமேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், தமிழ்நாடு முதல்வர் , 26.7.2024 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக, வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தில் 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள அடிக்கல் நாட்டினார். அதனை தொடர்ந்து அங்கு கட்டுமான பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்திற்கு நிதி ஒதுக்காதது ஏன்? உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு விளக்கம்

**சென்னை, மே 24-**

தமிழகத்திற்கு நிதி ஒதுக்காதது குறித்து உயர்நீதிமன்றத்தில் மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.

கல்வி உரிமை சட்டத்தின் கீழ் 25 சதவீத இடஒதுக்கீட்டு இடங்களுக்கு தமிழகத்துக்கு ஒதுக்க வேண்டிய நிதியை மத்திய அரசு ஒதுக்காததை எதிர்த்து தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. இந்த வழக்கு நேற்று முன்தினம் நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி. லட்சுமி நாராயணன் கொண்ட பெஞ்ச் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழ்நாட்டுக்கு ஒதுக்க வேண்டிய நிதி பற்றிய விவரங்களை சமர்ப்பிக்க வேண்டும் என மத்திய அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் வழக்கை நேற்றைக்கு ஒத்திவைத்தனர்.

அதன்படி நேற்று மத்திய அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் விளக்கம் அளித்தது. தனது விளக்கத்தில் "புதிய கல்விக் கொள்கை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக ஒப்பந்தத்தில் தமிழக அரசு கையெழுத்திடவில்லை. மத்திய அரசுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடாததால் தமிழக அரசுக்கு கல்வி நிதி ஒதுக்கப்படவில்லை'' எனக் குறிப்பிட்டிருந்தது.

இதற்கு தமிழக அரசு சார்பில் "ஒப்பந்தத்தில் கையெழுத்திடாவிட்டால் நிதி தர மாட்டோம் என்பது பெரியண்ணன் மனப்பான்மையை காட்டுகிறது'' எனத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள் வழக்கின் தீர்ப்பை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைத்தனர்.

# மின்சாரத்துறைக்கு ரூ.2 லட்சம் கோடி முதலீடு தேவை: அமைச்சர் சிவசங்கர்

**பெங்களூரு, மே 24-**

எதிர்வரும் ஐந்து முதல் ஏழாண்டுகளில் மின்சாரத் துறைக்கு ரூ.2 லட்சம் கோடி முதலீடு தேவை என்று அமைச்சர் சிவசங்கர் தெரிவித்தார்.

பெங்களூரில் நேற்று (மே 23) மத்திய அரசின் மின்சாரம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் தலைமையில் தென் மாநிலங்களின் மின்சாரத் துறை மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டில் பங்கேற்ற தமிழக போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் பேசியதாவது:-

அதிவேகமான மின் தேவை வளர்ச்சி, கரியமில வாயு உமிழ்வுகள் குறித்த அதிகரித்து வரும் சிக்கல்கள் மற்றும் புதிய எரிசக்தி மூலங்களில் நிகழும் தொடர்ச்சியான தொழில்நுட்பப் புதுமைகள் ஆகியன, நமது நாட்டின் எரிசக்திப் பாதுகாப்பின் எதிர்காலத்திற்குப் பெரும் சவால்களை முன்வைக்கின்றன. பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ச்சியாகப் பேணுவதற்கும், மின் தொகுப்பினை கரியமிலத் தாக்கத்திலிருந்து விடுவிப்பதற்கும் இத்துறையில் மிகப் பெரும் அளவிலான முதலீடுகள் இன்றியமையாததாகின்றன.

எதிர்வரும் ஐந்து முதல் ஏழாண்டுகளில், மின் உற்பத்தி, மின் செலுத்துகை, மின் சேமிப்பு மற்றும் மின் விநியோகம் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான மதிப்புச் சங்கிலியிலும் சுமார் ரூ. 2 லட்சம் கோடிக்கும் மேலான முதலீடுகள் அவசியமாகின்றன. இவ்வகையில், மின் பகிர்மான நிறுவனங்களின் நிதிநிலையைச் சீரமைத்து, அவற்றின் நிதி ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு, மாநில மற்றும் மத்திய அரசுகளின் முனைப்பானதும் ஒருமுகப்படுத்தப்பட்டதுமான ஒருங்கிணைந்த பேராதரவு அவசியமாகிறது என்று தெரிவித்தார். இந்த மாநாட்டில் தமிழக மின்வாரியத்தின் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

# விவசாயிகள் குறைதீர் கூட்டம்



**விருதுநகர், மே 24-**

விருதுநகரில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற்றது இதில் கலெக்டர் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். இக் கூட்டத்தில் ஆமத்தூர் வருவாய் கிராமத்திற்குட்பட்ட வீரச்செல்லையாபுரம் கிராம விவசாயிகள் 200 ஏக்கரில் விவசாயம் செய்து வருகின்றனர். இந்நிலையில் கடந்த 2 ஆண்டுகளாக விளைநிலத்திற்கு செல்லக்கூடிய நீர் வழித்தட பாதையை ஆக்கிரமித்துள்ள சிவகாசியை சேர்ந்த தனியார் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்க கோரி தமிழக விவசாயிகள் சங்கத்தினர் மற்றும் கிராம மக்கள் ஒன்றரை ஆண்டுகளாக போராடி வருகின்றனர். இதனைத் தொடர்ந்து மாவட்ட கலெக்டர் சம்பந்தப்பட்ட பிரச்சனைக்குரிய பகுதியை அளவீடு செய்ய உத்தரவிட்டார். சிறப்பு டிஆர்ஓ அளவீட்டில் நீர் வழித்தட பாதை ஆக்கிரமிப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து ஆக்கிரமிப்பை அகற்ற மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டது. இந்நிலையில் ஆக்கிரமிப்பு அகற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் அன்று இரவே உத்தரவை ரத்து செய்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் நேற்று கலெக்டர் தலைமையில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்க கூட்டத்தில் கலெக்டர் நடவடிக்கைக்கு எதிராக தரையில் அமர்ந்து விவசாயிகள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகள் ஆட்சியரை முற்றுகையிட்டு கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் விவசாயிகள் குறைதீர் கூட்டம் தடை ஏற்பட்டது. அதன் பின் பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் தர்ணாவில் ஈடுபட்ட விவசாயிகளை வெளியேற்றினர். மேலும் மாவட்ட நிர்வாகம் உத்தரவை எதிர்த்து விவசாயிகள் நீதிமன்றத்தை நாடலாம் என கலெக்டர் ஜெயசீலன் தெரிவித்தார்.

**திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி**
**செங்கல்பட்டு மாவட்டம்**

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்
(தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும்

ந.க.எண்: 165/2011 **மறு–ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** நாள்: 19.05.2025

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சிக்காகவும், அதன் சார்பாகவும் 2024 - 2025 ஆம் ஆண்டு பொதுநிதி திட்டத்தின் கீழ், பின்வரும் பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து 2025 - ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் நாள் (20.06.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை www.tntenders.gov.in என்கிற இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணிக்கு பதிவிறக்கம் செய்யப்பட்டு கூர்ந்தாய்வு அலுவலர்களால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியான ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமாக இதர நிபந்தனைகள் அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் அலுவலகத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | காப்புத் தொகை ரூ. | பணி முடிக்கும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | பாதாள சாக்கடைத் திட்டப்பணிக்கு ஜெட் ராடிங் இயந்திரம் 1 எண்ணிக்கை சப்ளை செய்தல் | 78.00 | ரூ. 78,000 | 90 தினங்கள் |

(ஒம்) ர. சங்கீதா, செயல் அலுவலர்,
செ.ம.தொ.இ/2524/ஒப்பந்தப்புள்ளி/2025 திருப்போரூர் சிறப்பு நிலை பேரூராட்சி, செங்கல்பட்டு மாவட்டம்

**நெய்யூர் இரண்டாம் நிலை பேரூராட்சி-கன்னியாகுமரி மாவட்டம்**
**(ONLINE TENDER)**

ந.க.எண்.194/2025/அ1 **ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு** நாள்: 22.05.2025

கன்னியாகுமரி மாவட்டம், நெய்யூர் இரண்டாம் நிலை பேரூராட்சியில் சிறப்பு நிதி (Special Fund) 2025–26–ன்கீழ் கீழ்குறிப்பிடும் பணிகளை செய்து முடிப்பதற்கு தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட இரண்டு உறை ஒப்பந்தப்புள்ளி முறையில் https://tntenders.gov.in (Online submission) மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

**வேலையின் விபரம்**

1. 1–வது வார்டு ஆலங்கோடு மெயின்ரோடு முதல் கண்ணோடு கொக்கோடு வழியாக அம்மன்கோவில் செல்லும் சாலை கருந்தளம் அமைத்தல். மதிப்பீடு தொகை (இலட்சத்தில்): 71.00; 1% வைப்புத் தொகை ரூ. 71000; ஒப்பந்ததாரர் தகுதி: IV and Above; ஒரு உறை முறை / இரு உறை முறை: இரு உறை முறை
2. படுவாக்கரை ஜங்ஷன் முதல் பாட்டவிளை மேல்நிலை நீர்தேக்க தொட்டி பம்பு ரூம் சாலை , ஒலக்கோடு பம்பு ரூம் முதல் காரை வழியாக கொடுமுட்டி பேருந்து நிலையம் சாலை, மேற்கு சானல் தெரு, சுண்டவிளை மேல்நிலை நீர்தேக்க தொட்டி–2 முதல் ஆக்கப்பத்துகுளம் சாலை , காடன்விளை முதல் பாளையம் ஆர்.சி.சர்ச் வழியாக பெருங்குளம் சாலை சிமெண்ட்தளம் அமைத்தல். மதிப்பீடு தொகை (இலட்சத்தில்): 111.00; 1% வைப்புத் தொகை ரூ. 111000; ஒப்பந்ததாரர் தகுதி: IV and Above; ஒரு உறை முறை / இரு உறை முறை: இரு உறை முறை

1. ஒப்பந்தப்புள்ளி படிவம் இறக்கம் செய்தல்: 26.05.2025 முதல் (இணையதளம் வாயிலாக); 2. ஒப்பந்ததாரர்களுக்கான முன் கலந்தாய்வு கூட்டம்: 09.06.2025; 3. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்: 13.06.2025 பிற்பகல் 3.00 மணிவரை (இணையதளம் வாயிலாக); 4. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள்: 13.06.2025 பிற்பகல் 3.30 மணி.

தொழில்நுட்பதகுதி மற்றும் இதர ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் குறித்த விவரங்கள் மற்றும் கூடுதல் விவரங்கள் அலுவலக வேலை நேரத்தில் அலுவலகத்தில் நேரில்கேட்டு தெரிந்துகொள்ளலாம். பேரூராட்சியின் SBI, Thiruvithancode Branch வங்கி கணக்கு எண். 67091954088 (IFSC எண். SBIN0070016) ல் இணையதளம் மூலம் வேலைக்கான வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்

தலைவர்,
நெய்யூர் இரண்டாம் நிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

செ.ம.தொ.இ / 2516 / ஒப்பந்தப்புள்ளி / 2025

செயல் அலுவலர்,
நெய்யூர் இரண்டாம் நிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்

## இங்கி.க்கு எதிரான டெஸ்ட் தொடர்:

# இந்திய அணியை இன்று அறிவிக்கிறது பி.சி.சி.ஐ.

## தமிழக வீரர் சாய் சுதர்சன் இடம்பெற வாய்ப்பு




**மும்பை, மே 24-**

இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் இந்திய அணியை பி.சி.சி.ஐ. இன்று அறிவிக்கிறது. இதில் சாய் சுதர்சன், அர்ஷ்தீப் சிங் இடம் பெற வாயப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

**டெஸ்ட் தொடர்....**

இந்திய கிரிக்கெட் அணி அடுத்த மாதம் (ஜூன்) முதல் இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. இந்தியா- இங்கிலாந்து இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி ஜூன் 20-ம் தேதி லீட்சில் தொடங்குகிறது. இந்திய டெஸ்ட் கேப்டன் ரோகித் சர்மா, நட்சத்திர வீரர் விராட் கோலி ஆகியோர் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்று விட்டதால் இங்கிலாந்து தொடரில் அவர்களுக்கு பதிலாக யார் இறங்குவார்கள் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. அத்துடன் புதிய டெஸ்ட் கேப்டனையும் நியமிக்க வேண்டி உள்ளது.

**இன்று அறிவிப்பு...**

இந்த நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆடும் இந்திய அணி இன்று அறிவிக்கப்பட உள்ளது . இது தொடர்பாக பி.சி.சி.ஐ. இந்திய அணி தலைமை பயிற்சியாளர் கம்பீருடன் இன்று ஆலோசனை மேற்கொள்கிறது. ஆலோசனைக்கு பிறகு இந்திய அணி அறிவிக்கப்பட உள்ளது.

**16 முதல் 17 வீரர்கள்...**

இதற்கிடையே இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் அணியில் இடம்பெறும் வீரர்கள் யார் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. கேப்டன் பதவிக்கு சுப்மன் கில், பும்ரா ஆகியோர் பெயர்கள் பரிசீலனையில் உள்ளது. இந்த நிலையில் இங்கிலாந்துக்கு எதிரான இந்திய டெஸ்ட் அணியில் 16 முதல் 17 வீரர்கள் இடம்பெறுகிறார்கள். இதில் தமிழக வீரர் சாய் சுதர்சன், வேகப்பந்து வீச்சாளர் அர்ஷ்தீப் சிங் ஆகியோர் முதல் முறையாக தேர்வு செய்யப்படுகிறார்கள்.

**முகமது சமி இல்லை...**

இதற்கிடையே வேகப் பந்து வீச்சாளர் முகமது சமி, இங்கிலாந்து தொடரில் இடம் பெற வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது. காயத்தில் இருந்து அவர் மீண்டு வந்திருந்தாலும் நீண்ட நேரம் பந்து வீசும் அளவுக்கு அவர் முழுமையாக குணமடையவில்லை என்றும், எனவே இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் முகமது சமி இடம்பெற மாட்டார் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

# ரோகித், விராட் கோலியின் இடத்தை நிரப்புவது கடினம்

## தலைமை பயிற்சியாளர் காம்பீர் பேட்டி




**மும்பை, மே 24-**

ரோகித் சர்மா மற்றும் விராட் கோலியின் இடத்தை நிரப்புவது மிகவும் கடினம் என இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் கவுதம் காம்பீர் தெரிவித்துள்ளார்.

**பின்னடைவு...**

இந்திய அணியின் மூத்த வீரர்களான ரோகித் சர்மா மற்றும் விராட் கோலி இருவரும் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அண்மையில் அறிவித்தனர். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் அடுத்த மாதம் தொடங்கவுள்ள நிலையில், இவர்களின் ஓய்வு இந்திய அணிக்கு பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

**கேப்டன் யார்?**

கேப்டன் ரோகித் சர்மா ஓய்வை அறிவித்துள்ள நிலையில், டெஸ்ட் போட்டிகளுக்கான இந்திய அணியின் அடுத்த கேப்டன் யார் என்ற எதிர்பார்ப்பும் ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது. ஜஸ்பிரித் பும்ரா அல்லது ஷுப்மன் கில் இவர்களில் ஒருவர் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான கேப்டனாக நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியை பி.சி.சி.ஐ. ஓரிரு நாள்களில் அறிவிக்கும் எனத் தெரிகிறது.

**மிகவும் கடினம்...**

இங்கிலாந்துக்கு எதிரான மிக முக்கியமான டெஸ்ட் தொடர் தொடங்கவுள்ள நிலையில், ரோகித் சர்மா மற்றும் விராட் கோலியின் இடத்தை நிரப்புவது மிகவும் கடினம் என இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் கவுதம் காம்பீர் தெரிவித்துள்ளது முக்கியத்துவம் பெறுகிறது. இது தொடர்பாக அவர் பேசியதாவது: ஒருவர் எப்போது கிரிக்கெட் பயணத்தை தொடங்க வேண்டும், எப்போது முடிக்க வேண்டும் என்பது அந்த நபரின் தனிப்பட்ட முடிவு என நினைக்கிறேன். அதனை முடிவு செய்வதற்கு வேறு யாருக்கும் உரிமை யில்லை.

**உரிமையில்லை...**

பயிற்சியாளர், அணித் தேர்வுக்குழு உறுப்பினர்கள், இந்திய நாட்டில் யாராக இருந்தாலும் வீரர் ஒருவர் எப்போது ஓய்வு பெற வேண்டும் அல்லது எப்போது ஓய்வு பெறக் கூடாது எனக் கூறுவதற்கு உரிமை யில்லை. அந்த முடிவை சம்பந்தப்பட்ட வீரர் அவராக எடுக்க வேண்டும். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மூத்த வீரர்கள் இருவர் இல்லாமல் விளையாட உள்ளோம். மூத்த வீரர்களான ரோகித் சர்மா, விராட் கோலி இருவரின் இடத்தையும் நிரப்புவது மிகவும் கடினம். ஆனால், மூத்த வீரர்களின் ஓய்வை மற்ற வீரர்களுக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பாக நினைத்து அவர்கள் சிறப்பாக விளையாட வேண்டும். சாம்பியன்ஸ் டிராபியின்போதும் இதனையே கூறினேன். அப்போது மூத்த வீரரான ஜஸ்பிரித் பும்ரா அணியில் இல்லை. அவர் இல்லாதது மற்ற வீரர்களுக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பு எனக் கூறினேன்.

**வயது எண் மட்டுமே...**

2027 ஆம் ஆண்டு ஒரு நாள் உலகக் கோப்பைத் தொடருக்கு இன்னும் நிறைய நாள்கள் இருக்கின்றன. அதற்கு முன்பாக, டி20 உலகக் கோப்பைத் தொடரில் விளையாடவுள்ளோம். அது மிகப்பெரிய தொடராக இருக்கப் போகிறது. அதனால், தற்போது இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்குப் பிறகு, இந்திய அணி டி20 உலகக் கோப்பைத் தொடரில் கவனம் செலுத்தவுள்ளது. நான் எப்போதும் ஒன்றை கூறுவதுண்டு. வீரர் ஒருவர் தொடர்ச்சியாக சிறப்பாக விளையாடினால், வயது என்பது வெறும் எண் மட்டுமே என்றார்.

## பஞ்சாப் அணி உரிமையாளர்களுக்கு எதிராக

# பிரீத்தி ஜிந்தா வழக்கு

**சண்டிகர், மே 24-**

பஞ்சாப் கிங்ஸ் இணை உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் பிரீத்தி ஜிந்தா வழக்கு தொடர்ந்துள்ளார்.

**இணை உரிமையாளர்...**

பாலிவுட் நடிகை பிரீத்தி ஜிந்தா, ஐ.பி.எல். அணியான பஞ்சாப் கிங்ஸின் இணை உரிமையாளர் ஆவார். இந்த அணியின் உரிமையை வைத்திருக்கும் கே.பி.ஹெச். டிரீம் கிரிக்கெட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் இணை இயக்குநர் பதவியை பிரீத்தி ஜிந்தா வகிக்கிறார்.

**குற்றச்சாட்டு...**

இந்நிலையில் நிறுவனத்தின் இணை இயக்குநர்களான மோஹித் பர்மன் மற்றும் நெஸ் வாடியா ஆகியோருக்கு எதிராக சண்டிகர் நீதிமன்றத்தில் பிரீத்தி ஜிந்தா வழக்குத் தொடர்ந்துள்ளார். நிறுவனம் சார்பில் ஏப்ரல் 21 அன்று நடைபெற்ற கூட்டத்தில் முனிஷ் கன்னா புதிய இயக்குநராக நியமிக்கப்பட்டார். இருப்பினும், இந்தக் கூட்டத்தை நடத்துவதில் 'நிறுவனங்கள் சட்டம், 2013' மற்றும் பிற விதிகள் பின்பற்றப்படவில்லை என்று பிரீத்தி ஜிந்தா தனது மனுவில் குற்றம் சாட்டினார். இந்த கூட்டம் குறித்து ஏப்ரல் 10 ஆம் தேதி மின்னஞ்சல் மூலம் தனக்குத் தெரிவிக்கப்பட்ட போதிலும், தான் எழுப்பிய ஆட்சேபனைகள் புறக்கணிக்கப்பட்டதாக பிரீத்தி ஜிந்தா கூறினார்.

**எதிர்ப்பு...**

சர்ச்சைக்குரிய இந்த கூட்டத்தில் பிரீத்தி ஜிந்தாவுடன், மற்றொரு இயக்குநர் கரண் பாலும் கலந்து கொண்டார். முனிஷ் கன்னாவின் நியமனத்தை இருவரும் கடுமையாக எதிர்த்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும், மோஹித் பர்மன் மற்றும் நெஸ் வாடியாவின் ஆதரவுடன் கூட்டம் தொடர்ந்ததாகவும், கன்னாவின் நியமனம் இறுதி செய்யப்பட்டதாகவும் பிரீத்தி தனது புகாரில் தெரிவித்துள்ளார்.

**விவாதம்...**

இந்த சூழலில், ஏப்ரல் 21 அன்று நடைபெற்ற கூட்டத்தையும் அதில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் ரத்து செய்யுமாறு பிரீத்தி ஜிந்தா நீதிமன்றத்தை நாடியுள்ளார். முனிஷ் கன்னா இயக்குநராக செயல்படுவதைத் தடை செய்ய வேண்டும் என்றும் அவர் தனது மனுவில் கேட்டுக் கொண்டார். இந்த விவகாரம் ஐ.பி.எல். வட்டாரங்களில் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து சரிவு

**மேட்டூர், மே 24-**

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நேற்று வினாடிக்கு 9,347 கனஅடியாக குறைந்துள்ளது. காவிரியின் நீர் பிடிப்புப் பகுதிகளில் மழை குறைந்ததை அடுத்து மேட்டூர் அணைக்கு வரும் நீர்வரத்து குறையத் தொடங்கியது. நேற்று முன்தினம் காலை மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 13,606 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த நீர் வரத்து, வெள்ளிக்கிழமை காலை வினாடிக்கு 9,347 கன அடியாக குறைந்துள்ளது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 1,000 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் காலை 110.77 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் 111.25 அடியாக உயர்ந்துள்ளது. நீர் இருப்பு 80.19 டிஎம்சியாக உள்ளது.

## சமூக வலைதளங்களில் ரவி மோகன், ஆர்த்தி குறித்த செய்தி வெளியிட தடை

### சென்னை ஐகோர்ட் உத்தரவு

**சென்னை, மே 24-**

சமூக வலைதளங்களில் நடிகர் ரவி மோகன் ஆர்த்தி தம்பதியர் குறித்த செய்திகளை வெளியிடவும், விவாதிக்கவும் தடை விதித்தும் நீதிபதி உத்தரவிட்டார்.

திருமண நிகழ்ச்சி ஒன்றில் பாடகி கெனிஷா உடன் நடிகர் ரவி மோகன் கலந்து கொண்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இதற்கு, ஆர்த்தி காட்டமான அறிக்கையை வெளியிட்டு இருந்தார். இதற்கு பதில் அளித்து நடிகர் ரவி மோகனும் அறிக்கை வெளியிட்டிருந்தார். "தனக்கு எதிராக அவதூறு கருத்துக்களை தெரிவிக்க மனைவி ஆர்த்திக்கு தடை விதிக்க வேண்டும்" எனக் கோரி நடிகர் ரவி மோகன் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நடிகர் ரவி மோகன் மற்றும் ஆர்த்தி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர்கள், "இரு தரப்பினரும் பரஸ்பரம் எந்த அவதூறு கருத்துக்களையும் தெரிவிக்க மாட்டோம் என்றும் ஏற்கெனவே பதிவிட்டுள்ள பதிவுகளை நீக்கி விடுவதாகவும் தெரிவித்தனர். மேலும் இருவர் குறித்தும் சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியிட தடை விதிக்க வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்தனர்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, இரு தரப்பினரும் அவதூறு கருத்துக்கள் தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் என உத்தரவிட்டார். மேலும் ஏற்கெனவே பொதுத்தளத்தில் பதிவிட்டுள்ள கருத்துக்களை நீக்க வேண்டுமென இருதரப்பினருக்கும் அறிவுறுத்தினார். மேலும், சமூக வலைதளங்களில் நடிகர் ரவி மோகன் ஆர்த்தி தம்பதியர் குறித்த செய்திகளை வெளியிடவும், விவாதிக்கவும் தடை விதித்தும் நீதிபதி உத்தரவிட்டார்.

## டெஸ்ட்: மேத்யூஸ் திடீர் ஓய்வு

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறப் போவதாக இலங்கை வீரர் ஏஞ்சலோ மேத்யூஸ் அறிவித்துள்ளார் . ஜூன் 17ம் தேதி தொடங்கும் வங்காளதேசத்தத்திற்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியுடன் ஏஞ்சலோ மேத்யூஸ் ஓய்வு பெறுகிறார். இலங்கை அணி நிர்வாகம் விரும்பும் பட்சத்தில் ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் தொடர்ந்து விளையாடத் தயார் எனவும் விளக்கமளித்துள்ளார்.

118 டெஸ்ட் போட்டிகளில், மேத்யூஸ் 44.62 சராசரியுடன் 8,167 ரன்கள் எடுத்துள்ளார். இதில் 16 சதங்கள் மற்றும் 45 அரைசதங்கள் அடங்கும். அவரது அதிகபட்ச ஸ்கோர் 200 ரன்கள் ஆகும். டெஸ்ட் போட்டிகளில் இலங்கை அணிக்காக அதிக ரன்கள் குவித்த 3வது வீரராக ஏஞ்சலோ மேத்யூஸ் உள்ளார்.

## ஹம்பர்க் ஓபன்: ரூப் லெவ் முன்னேற்றம்

ஜெர்மனியில் ஹம்பர்க் ஓபன் ஆண்கள் டென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது . இதன் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்றில் ரஷியாவின் ஆண்ட்ரே ரூப்லெவ், இத்தாலியின் லூசியானோ டர்டேரி உடன் மோதினார்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதல் சிறப்பாக ஆடிய ரூப்லெவ் 6-1, 3-6, 6-3 என வென்று அரையிறுதிக்கு முன்னேறினார். இன்று நடைபெறும் அரையிறுதியில் கனடாவின் பெலிக்ஸ் ஆகர் உடன் ரூப்லெவ் மோதுகிறார்.

## கிரிக்கெட் மைதானம் திறப்பு

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் சார்பில் செங்குன்றம் அடுத்த எடப்பாளையத்தில் கோஜன் கிரிக்கெட் மைதானம் திறக்கப்பட்டுள்ளது. புதிய வளாகத்தில் 4 மைதானங்கள், 3 டர்ப் வசதிகள் உள்ளன. வலைப் பயிற்சிக்காக 10 டர்ஃப் விக்கெட்டுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கத் தலைவர் பி. அசோக் சிகாமணி தலைமை வகித்தார். முன்னாள் இந்திய வீரர்கள் வி.வி. குமார், சத்விந்தர் சிங் ஆகியோர் புதிய மைதானங்களை திறந்து வைத்தனர். திருவள்ளூர் ஆட்சியர் மு. பிரதாப், கோஜன் கல்விக் குழும தலைவர் ஜி. நடராஜன், துணைத் தலைவர் என். விஸ்வநாதன் முன்னிலை வகித்தனர். டி.என்.சி.ஏ. துணைத் தலைவர் ஆடம் சேட், செயலாளர் ஆர்.ஐ. பழனி, பொருளாளர் டிஜே. சீனிவாசராஜ், இணைச் செயலாளர் ஆர்.என். பாபா ஆகியோர் பங்கேற்றனர்.

## ஆர்.சி.பி.: பில் சால்ட் விலகல்

10 அணிகள் இடையிலான 18-வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இறுதி கட்டத்தை எட்டி விட்டது. குஜராத் டைட்டன்ஸ், பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ், பஞ்சாப் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ் ஆகிய அணிகள் இறுதிப்போட்டிக்கு முந்தைய 'பிளே-ஆப்' சுற்றுக்கு முன்னேறி இருக்கின்றன. இந்த நிலையில் லக்னோவில் நேற்று நடைபெற்ற 65-வது லீக் ஆட்டத்தில் பெங்களூரு ராயல் சேலஞ்சர்ஸ், முன்னாள் சாம்பியனான ஐதராபாத் சன் ரைசர்ஸ் அணியை எதிர்கொண்டது.

இந்நிலையில் பெங்களூரு அணியின் தொடக்க வீரர் பில் சால்ட் ஐ.பி.எல். தொடரில் இருந்து விலகி உள்ளார். அவருக்கு சில தினங்களில் குழந்தை பிறக்கவுள்ளதால் பிளே ஆப் சுற்றை தவறவிடுகிறார். இந்த முறையாவது ஆர்.சி.பி. அணி கோப்பையை வெல்வதற்கு உத்வேகத்தில் இருக்கும் நிலையில் இவரது விலகல் ஆர்.சி.பி. அணிக்கு பின்னடைவாக இருக்கும். இவர் நடப்பு தொடரில் 9 போட்டிகள் விளையாடி 239 ரன்கள் குவித்துள்ளார்.

## மீண்டும் ஜோஸ் ஹேசில்வுட்?

ஐ.பி.எல். 18-வது சீசன் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இன்னும் நான்கு நாள்களில் லீக் சுற்று போட்டிகள் முடிவடைய உள்ளன. குஜராத் டைட்டன்ஸ், ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, பஞ்சாப் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் பிளே ஆப் சுற்றுக்கு முன்னேறியுள்ளன. ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்காக விளையாடி வரும் வேகப் பந்துவீச்சாளர் ஜோஸ் ஹேசில்வுட் காயம் காரணமாக கடந்த சில போட்டிகளாக அந்த அணிக்காக விளையாடவில்லை.

இந்த நிலையில், தோள்பட்டை காயத்திலிருந்து குணமடைந்துள்ள ஜோஸ் ஹேசில்வுட் பிளே ஆப் சுற்றுக்காக ஆர்சிபி அணியுடன் மீண்டும் இணைய வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுவது முக்கியத்துவம் பெறுகிறது. பிளே ஆப் சுற்று வருகிற மே 29 ஆம் தேதி முதல் தொடங்கவுள்ள நிலையில், ஜோஸ் ஹேசில்வுட் ஆர்சிபியுடன் மீண்டும் இணைந்தால், அந்த அணிக்கு அது கூடுதல் பலமாக அமையும். நடப்பு ஐ.பி.எல். தொடரில் ஆர்சிபிக்காக அபார பந்துவீச்சை வெளிப்படுத்திய ஜோஸ் ஹேசில்வுட் 19 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளது குறிப்பிடத்தக்கது.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் சாலையில் அமைந்துள்ள மன்னர் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையரின் 1,350-வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

## பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் வழியில்

# தமிழ்நாடு போராடும்; வெல்லும்: அமைச்சர் அன்பில் மகேஷ் பேட்டி

**திருச்சி, மே 24-**

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் வழியில் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் என முத்திரையர் சிலைக்கு மாலை அணிவித்த பின் அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தை ஆட்சி புரிந்த முத்தரையர் இன முதல் பேரரசர் சுவரன்மாறன் பெரும்பிடுகு முத்தரையர் ஆவார். இவர், நாட்டின் விடுதலைக்காகவும், சமுதாய மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டவர். ஒவ்வொரு ஆண்டும் மே 23-ஆம் தேதி அவரது நினைவை போற்றிடும் வகையில் முத்தரையர் பிறந்த நாள் விழா கொண்டாடப்படுகிறது. பெரும்பிடுகு முத்தரையரின் 1350 ஆவது சதய விழா வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டு வருகிறது. அதனை முன்னிட்டு திமுக, அதிமுக உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகள், முத்தரையர் அமைப்புகள் திருச்சி ஒத்தக் கடையில் உள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக திருச்சி திமுக தெற்கு மாவட்ட செயலாளரும் பள்ளி கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி முத்திரையர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவரைத் தொடர்ந்து முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கே.என்.சேகரன் உள்பட பலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். தொடர்ந்து செய்தியாளர்களுடன் அமைச்சர் அன்பில் மகேஷ் பேசுகையில், பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கான தலைவர் அல்ல ஒட்டுமொத்த தமிழகத்திற்கான தலைவர். அவர் வழியில் தமிழுக்காகவும் தமிழ் இனத்திற்காகவும் தமிழ்நாடு போராடும்,தமிழ்நாடு வெல்லும் என கூறினார்.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

# பள்ளி குழந்தைகளுக்கான காலை உணவுத்திட்டம் ஜூன் 3-ல் விரிவாக்கம்

**சென்னை, மே 24-**

பள்ளி குழந்தைகளுக்காக காலை உணவுத் திட்டம் வரும் ஜூன் 3-ந்தேதி முதல் விரிவாக்கம் செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டில் பள்ளி குழந்தைகளுக்காக காலை உணவுத் திட்டம் 2022-ம் ஆண்டு செப்டம்பர் 15-ந் தேதி தொடங்கப்பட்டது. முதல் கட்டமாக அரசு பள்ளிகளில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. அதன் பிறகு ஊரகப் பகுதிகளில் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளுக்கும் காலை உணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இந்த திட்டத்தில் தமிழகத்தில் உள்ள 30,992 அரசு பள்ளிகளிலும், ஊரகப் பகுதிகளில் உள்ள 3,995 அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், 17.53 லட்சம் மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

நடப்பு கல்வியாண்டு முதல், நகர்ப்புறங்களில் இயங்கி வரும் 1,545 அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் 1.14 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில், காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று தமிழக அரசின் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு இந்த ஆண்டு ரூ.600 கோடி ஒதுக்கப்பட்டது.

பட்ஜெட்டில் அறிவித்தபடி நகரங்களில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 3-ந்தேதியில் இருந்து காலை உணவு திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. இதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்து வருகின்றனர்.

# கோவில் சொத்துகளை பாதுகாப்பதில் தி.மு.க. அரசு தீவிரம்: அமைச்சர் தகவல்

**சென்னை, மே 24-**

கோவில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றி பாதுகாப்பதில் தி.மு.க. அரசு முனைப்போடு செயலாற்றி வருகிறது என்று அமைச்சர் சேகர்பாபு கூறியுள்ளார்.

சென்னை, வியாசர்பாடி, ரவீஸ்வரர் கோவில் சார்பில் ரூ.55.85 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மரகதாம்பாள் திருமண மண்டபத்தை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் சேகர்பாபு கூறியதாவது:- தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத்துறையானது திருக்கோவில்களின் மேம்பாட்டிற்கும், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை உருவாக்கி தருவதிலும், திருக்கோவில் சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றி பாதுகாப்பதிலும் முனைப்போடு செயலாற்றி வருகிறது.

அந்த வகையில் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த ரவீஸ்வரர் கோவில் சார்பில் ரூ.55.85 லட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள மரகதாம்பாள் திருமண மண்டபத்தினை திறந்து வைத்துள்ளோம். இக்கோவிலுக்கு குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் நிறைவுற்றுள்ள நிலையில் திருக்கோவில் நிதி மற்றும் உபயதாரர் நிதி ரூ.2.14 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.1.98 கோடி மதிப்பீட்டில் சுவாமி, அம்பாள் சன்னதிகள், மகா மண்டபம், நந்தி மண்டபம், கொடிமரம், பலிபீடம் போன்றவற்றை சாலை மட்டத்திலிந்து 8½ அடி உயர்த்திட பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இத்திருக்கோவிலின் திருக்குளமானது ரூ.87.90 லட்சம் செலவில் சீரமைக்கப்பட்டு பக்தர்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இறையன்பர்கள் மகிழ்ச்சியுறும் வகையில் எண்ணற்ற திருப்பணிகளை மேற்கொண்டு ஆன்மிக அரசாக இந்த அரசு திகழ்ந்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# ஏற்காட்டில் 48-வது கோடை விழா: அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்

**ஏற்காடு, மே 24-**

ஏற்காட்டில் 48-வது கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியை அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர்.

இயற்கை எழில் கொஞ்சும் ஏற்காட்டில் ஆண்டு தோறும் மே மாதத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் 48-வது கோடை விழா மற்றும் மலர் கண்காட்சியை அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், ராஜகண்ணப்பன், ராஜேந்திரன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்த விழாவில் கலெக்டர் பிருந்தாதேவி மற்றும் எம்.பி.க்கள் டி.எம்.செல்வகணபதி, மலையரசன் மற்றும் எம்.எல்.ஏ.க்கள், அரசு அதிகாரிகள் உள்பட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

இந்த கோடை விழாவில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தோட்டக்கலைத்துறை சார்பில் அண்ணா பூங்காவில் 1½ லட்சம் மலர்களை கொண்டு மலர் கண்காட்சி, பழங்கள் மற்றும் காய்கறி கண்காட்சியும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் வகையில் அண்ணா பூங்கா வளாகத்தில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வண்ண மலர் தொட்டிகளை கொண்ட மலர் காட்சியும் அமைக்கப்பட்டுள்ளது. இதே போல தாவரவியல் பூங்கா, ரோஜா தோட்டம் ஆகியவற்றிலும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மலர் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

# சான்றிதழ்களை கேட்டு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு உடனே வழங்க உத்தரவு

## அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் பேட்டி



**அருப்புக்கோட்டை, மே 24-**

அருப்புக்கோட்டை அருகே பாளையம்பட்டியில் உள்ள அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞரின் கனவு இல்ல திட்ட பயனாளிகளுக்கு அரசாணை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் கலந்து கொண்டு 107 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்ல திட்ட அரசாணை வழங்கினார்.

அதனை தொடர்ந்து அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் நிருபர்களிடம் கூறியது.

விரைவில் பள்ளிகள் திறக்கப்பட உள்ள நிலையில் பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கும் சாதிச் சான்றிதழ் வருமானவரி சான்றிதழ் உள்ளிட்ட சான்றிதழ்களை ஒரு வாரத்திற்குள் வழங்க வேண்டும் என வருவாய்த்துறை ஊழியர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது என கூறினார். மேலும் சான்றிதழ் கேட்டு இ சேவை மையத்திற்கு வரும் மாணவர்களுக்கு முன்னுரிமையும் சான்றிதழ் வாங்குவதில் பிரச்சனை ஏற்பட்டால் உடனடியாக வட்டாட்சியர் மற்றும் கோட்டாட்சியரை அணுகி உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே. .எஸ்.எஸ்.ஆர். ஆர்.ரமேஷ், வருவாய் கோட்டாட்சியர் கனகராஜ், வட்டாட்சியர் செந்தில் வேல், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காமேஸ்வரி ராமநாதன் தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ் அருப்புக்கோட்டை முன்னாள் நகர மன்ற தலைவர் சிவபிரகாசம்,துணை தலைவர் பழனிச்சாமி, முன்னாள் ஒன்றிய கவுன்சிலர்கள் தி.மு.க. நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் சதய விழா: கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் மரியாதை



**மேலூர், மே 24-**

பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் 1350 -ம் ஆண்டு சதய விழாவையொட்டி தமிழக பாஜக மாநில தலைவரும் எம்.எல்.ஏவுமான நயினார் நாகேந்திரன், மகாராஷ்டிரா கவர்னர் சி. பி. ராதாகிருஷ்ணன் ஆகியோர் முத்தரையர் திருவுருடத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் பா.ஜ.க. மாவட்ட தலைவர் ராஜசிம்மன், மாநகர் மாவட்ட தலைவர் மாரி சக்கரவர்த்தி, கண்ணன், மூவேந்திரன், மஞ்சுளா சேவுகமூர்த்தி, ஆனந்த ஜெயம், குமார், தர்மலிங்கம்,செந்தில், மற்றும் முத்தரையர் நிர்வாகிகள் நிகழ்ச்சி ஏற்பாட்டினை கல்வியாளர் பிரிவு மாவட்ட தலைவர் ராஜூ ஏற்பாடு செய்திருந்தார்.




மதுரை மாநகராட்சி அரங்கில் மாமன்ற கூட்டம் மேயர் இந்திராணி தலைமையில் நடைபெற்றது. உடன் ஆணையாளர் சித்ரா, துணை மேயர் நாகராஜன், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

# நிலக்கோட்டையில் ஜமாபந்தியை முன்னிட்டு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் மரக்கன்று நடவு செய்யும் விழா



**வத்தலக்குண்டு, மே 24-**

திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாபந்தி தொடங்கியது, முன்னதாக மரக்கன்று நடவு செய்யும் விழா நடைபெற்றது, திண்டுக்கல் மாவட்ட வருவாய் கோட்டாட்சியரும் ஜமா பந்தி அலுவலருமான இரா சக்திவேல் மரக்கன்று நடவு செய்தார். இந்நிகழ்ச்சியில் நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி மண்டல துணை வட்டாட்சியர்கள் சௌந்தர பாண்டியன் ஜெயக்குமார் வட்ட வழங்கல் அலுவலர் அபிராமி தலைமை இடத்து துணை வட்டாட்சியர் தங்கேஸ்வரி தேர்தல் துணை வட்டாட்சியர் பால குருநாதன் வருவாய் ஆய்வாளர்கள் பரிமளா விமலா ரவிச்சந்திரன் பாரதி வெண்ணிலா கிராம நிர்வாக அலுவலர்கள் கணேசன் ராமமூர்த்தி தெய்வேந்திரன் மற்றும் வருவாய் துறை அதிகாரிகள் திருவிழா கலந்து கொண்டார்கள்.



பரமக்குடி தி.மு.க. தெற்கு நகர் இளைஞரணி அமைப்பாளர் வழக்கறிஞர் மு.துரைமுருகன் தனது பிறந்த நாளை முன்னிட்டு தமிழக முதல்வர் மு. க.ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் ஹரிஷ் மணிகண்டன் இருந்தார்.

# வத்தலக்குண்டில் மோட்டார் வாகன ஆய்வாளர் பதவி ஏற்பு



**வத்தலகுண்டு, மே 24-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டில் உள்ள மோட்டார் வாகன பகுதி அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளராக ஆர் இளங்கோ பதவி ஏற்றுள்ளார்.

இவர் இதற்கு முன்பு திண்டுக்கல்லில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது மாறுதலாகி வத்தலகுண்டில் பதவி ஏற்றுள்ளார். இதற்கு முன்பு வத்தலகுண்டில் மோட்டார் வாகன ஆய்வாளராக பணிபுரிந்து வந்த ஜாஸ்மின் பதவி மாறுதலாகி சிவகாசியில் மோட்டார் வாகன ஆய்வாளராக பதவியேற்று உள்ளார். வத்தலகுண்டில் பதவி ஏற்றுள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் ஆர் இளங்கோவுக்கு வரவேற்பும். சிவகாசிக்கு மாறுதலாகி சென்றுள்ள ஜாஸ்மினுக்கு வழியனுப்பு விழாவும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

# நத்தத்தில் முத்தரையர் பிறந்தநாள் விழா



**நத்தம், மே 24-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் வீரமுத்தரையர் முன்னேற்ற சங்கம் மற்றும் தமிழர் தேசம் கட்சி சார்பில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இதற்கு மாவட்ட செயலாளர் பிரபு அம்பலம் தலைமை தாங்கினார். மாநில மாணவரணி செயலாளர் பூமி அம்பலம், மாவட்ட அவைத் தலைவர் சேகர், மாவட்ட இணை செயலாளர் வெள்ளிமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.தொடர்ந்து சேர்வீடு விலக்கு பகுதியில் வைக்கப்பட்டிருந்த முத்தரையர் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் மாவட்ட துணை செயலாளர்கள் ஆட்டோபூமி,ராஜா உள்ளிட்ட தமிழர் தேசம், வீர முத்தரையர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பேரூராட்சி கடை ஏலத்தில்

# முன்னாள் கடை வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்க கோரி மனு

**முதுகுளத்தூர், மே 24-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் நகர் வர்த்தக சங்கத்தின் சார்பாக முதுகுளத்தூர் பேரூராட்சிக்கு பாத்தியப்பட்ட பேருந்து நிலைய வளாக கடைகளுக்கான ஏலம் நடைபெற உள்ளதால் அந்த ஏலத்தில் முன்னாள் கடை வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென தலைவர் இராமப்பாண்டியன் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்தனர். இந்த நிகழ்வில் செயலாளர் எம்.ஜஹூபர் அலி, பொருளாளர் ஆர்.சந்திரசேகரன், கௌரவத்தலைவர் உ.வி.அழகர்சாமி, கருப்புசாமி, துணைத் தலைவர் கே.வி.பார்த்திபன், துணைச் செயலாளர் ஜி.செந்தில்நாதன், தணிக்கையாளர் தீக்கதிர் முத்துமணி, தாலுகா செயலாளர் ஜயவுதீன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# பகவதி அம்மன் கோவிலில் 108 சங்காபிஷேகம்



**நத்தம், மே 24-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம்-அசோக்நகர் பகவதி அம்மன் கோவிலில் உலக நன்மை வேண்டியும், மழை வேண்டியும் சங்காபிஷேகம் நடந்தது. இதையொட்டி கோவில் வளாகத்தில் 108 சங்குகள் அமைக்கப்பட்டு அதில் வில்வ இலைகள், புஷ்பங்களால் அலங்கரிங்கப்பட்டிருந்தது. தொடர்ந்து யாகசாலை அமைக்கப்பட்டு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க பூஜைகள் நடந்தது. பின்னர் கோ பூஜைகள் நடந்தது. தொடர்ந்து மூலவர் பகவதி அம்மனுக்கு பால், பழம், பன்னீர், விபூதி, சந்தனம், புஷ்பம், இளநீர், பஞ்சாமிர்தம், உள்ளிட்ட 16 வகையான அபிஷேகங்களும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



திண்டுக்கல் மேற்கு மாவட்டம் வேடசந்தூர் சட்டமன்ற தொகுதி குஜிலியம்பாறை அ.தி.மு.க. கிழக்கு ஒன்றிய செயலாளர் மலர்வண்ணன் ஏற்பாட்டில் பூத் கமிட்டி அமைப்பது மற்றும் இளைஞர் இளம்பெண்கள் பாசறையில் உறுப்பினர்கள் சேர்ப்பது, இளம் தலைமுறை விளையாட்டு வீரர்களை உறுப்பினர்களாக சேர்ப்பது குறித்த ஆலோசனைக் கூட்டம் அ.தி.மு.க. பொருளாளரும், திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சி.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. உடன் அமைப்பு செயலாளரும் மண்டல பொறுப்பாளரு மான ஆசைமணி, மாநில இளைஞர் இளம் பெண்கள் பாசறை செயலாளர் டாக்டர் வி.பி.பி.பரமசிவம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தென்னம்பட்டி பழனிசாமி, பாளையம் பேரூர் செயலாளர் மணிமாறன், மாவட்ட கவுன்சிலர் மீனாட்சி சிவக்குமார், ஒன்றிய பொருளாளர் நாடு காணி , ஒன்றிய கவுன்சிலர் மல்லிகா உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## ராஜபாளையம் அருகே

# அ.தி.மு.க. சார்பில் நலத்திட்ட உதவிகள்: முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார்



**ராஜபாளையம், மே 24-**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் அருகே தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதல்வருமான அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி 71-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அதிமுக சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

ராஜபாளையம் அருகே சமுசிகாபுரத்தை அடுத்த எஸ்.ராமலிங்கபுரம் கிராமத்தில் அமைந்துள்ள சங்கிலியாண்டி சுவாமி திருக்கோவிலில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி பிறந்தநாளை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை முன்னாள் அமைச்சர் ஆர். பி உதயகுமார் வழங்கினார். பின்னர் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கினார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை சாத்தூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். எஸ். ஆர். ராஜவர்மன் செய்திருந்தார். முன்னாள் அமைச்சர் ஆர்.பி உதயகுமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது; விளம்பர அரசாக திமுக அரசு செயல்படுகிறது. விளம்பர அரசு என்றும் நீடிக்காது.நாட்டு மக்கள் மீது அக்கறை இல்லாமல் தனது வீட்டு மக்கள் மீது அக்கறை உள்ள அரசாங்க திமுக செயல்பட்டு வருகிறது. நாட்டு மக்களை பற்றி அவர்களுக்கு கவலை இல்லை தங்கள் வீட்டு மக்கள் மீது தான் கவலை அதற்கு ஒரே உதாரணம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சினிமா வாய்ப்பு தேடி சென்னையை சுற்றி வந்த நபர் இன்று ஆயிரம் கோடி ரூபாய் கலைத்துறையில் முதலீடு செய்துள்ளார். ஏனென்றால் அவர் மு.க முத்துவின் மகள் வழி பேத்தியை திருமணம் செய்துள்ளார். அந்த ஒரே தகுதி தான் அவர் தான் ஆகாஷ் பாஸ்கரன் என்பவர் பணம் மாற்றம் செய்வதற்காக இவர் பயன்படுத்தி வந்துள்ளார். இவர்கள் செய்யும் செயல்களை மக்கள் கவனித்து வருகின்றனர்.மக்கள் இது விளம்பர அரசு விளம்பர அரசு என்று நீடிக்காது இந்த அரசை அப்புறப்படுத்த மக்கள் தயாராகி விட்டனர். 2026 அதிமுக ஆட்சி எடப்பாடியார் தலைமையில் அமையும், விசைத்தறி தொழிலாளர்கள் கூலி உயர்வு குறித்து முதல்வரும், கைத்தறித்துறை அமைச்சரும் உடனடியாக தலையிட்டு தீர்வு காண வேண்டும் என செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

## அருப்புக்கோட்டையில்

# பேரரசர் பெரும்பிடுகு முத்தரையாரின் சதய விழா: அ.தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை



**அருப்புக்கோட்டை, மே 24-**

அருப்புக்கோட்டையில் பேரரசர் பெரும்பிடுகு முத்திரையர் சதய விழாவை முன்னிட்டு விருதுநகர் கிழக்கு மாவட்ட அண்ணா திமுக சார்பாக மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன் தலைமையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜவர்மன், சுப்பிரமணியன், கிழக்கு மாவட்ட அவை தலைவர் ஜெயபெருமாள், அருப்புக்கோட்டை நகரக் கழகச் செயலாளர் சோலை. சேதுபதி ஆகியோர் முன்னிலையில் அருப்புக்கோட்டை வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் போடம்பட்டி சங்கரலிங்கம் ஏற்பாட்டில் அருப்புக்கோடடைஅருகே செம்பட்டியிலும் பாலையம்பட்டியில் உள்ள பேரரசர் பெரும்பிடுகு முத்தரையாரின் முழு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதன்பின் பொது மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் அருப்புக்கோட்டை தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் யோகா வாசுதேவன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் தேவதுரை, குருசாமி, கருப்பசாமி, முனியாண்டி, முத்துராமலிங்கம், காரியாபட்டி பேரூராட்சி செயலாளர் விஜயன், பிற அணி மாவட்டச் செயலாளர்கள்* விமல் குருசாமி, ராமர், ராமநாதன், ராம் பாண்டியன், மகளிர் அணி துணைச் செயலாளர் கலைச்செல்வி, மற்றும் துரைராஜ்,பந்தல்குடி முருகேசன், பாளையம்பட்டி மோகன், விஜயன், திருவிருந்தால்புரம் கருப்பசாமி, செம்பட்டி பொன்னம்பலம், சின்னச்சாமி, சவுண்டையா, வெள்ளக்கோட்டை கலு சிவலிங்கம், காரியாபட்டி சண்முகம், ராமச்சந்திரன், ராம்குமார், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# டெல்லியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சோனியா, ராகுல்காந்தியை சந்தித்தார்



டெல்லி, மே 24-

டெல்லி சென்றுள்ள முதல்வர் மு.க. ஸ்டாலின், காங்கிரஸ் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தியைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

மத்திய அரசின் நிதி நிர்வாகம் தொடர்பான நிதி ஆயோக் கூட்டம் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. நடப்பாண்டு நிதி ஆயோக் கூட்டம் மே 24-ல் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற உள்ளது. நிதி ஆயோக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெள்ளிக்கிழமை காலை டெல்லி புறப்பட்டுச் சென்றார். டெல்லி சென்ற அவருக்கு திமுக எம்.பி.க்கள் உள்ளிட்டோர் சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

முந்தைய ஆண்டுகளில் நிதி ஆயோக் கூட்டத்தை புறக்கணித்த முதல்வர் ஸ்டாலின், இந்தாண்டு கூட்டத்தில் பங்கேற்று, தமிழகத்துக்கு தேவையான நிதி குறித்து முறையிடப் போவதாக ஏற்கெனவே விளக்கம் அளித்திருந்தார். இந்நிலையில் டெல்லி சென்ற முதல்வர், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை சந்தித்தார். டெல்லியில் சோனியா காந்தியின் இல்லத்தில் இந்த சந்திப்பானது நடைபெற்றது.

# நகைக்கடனுக்கான புதிய விதிகளை திரும்பப்பெற இ.பி.எஸ். வலியுறுத்தல்

சென்னை, மே 24-

நகைக்கடனுக்கான புதிய விதிகளை ரிசர்வ் வங்கி உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தி உள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-



இந்திய மக்கள் தொகையில் சுமார் 80 சதவீத மக்களுக்குமேல் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் ஆவார்கள். இவர்கள் அனைவரும் ஏதேனும் ஒரு அவசரத் தேவை ஏற்படின், அருகில் உள்ள கூட்டுறவு வங்கிகள் மற்றும் வணிக வங்கிகளில் தங்களது நகைகளை அடமானம் வைத்து, நிலைமையை சமாளிக்கும் சராசரி மக்கள் ஆவார்கள்.

இந்நிலையில், ரிசர்வ் வங்கி அண்மையில் நகை அடமானத்திற்கு புதிய விதிமுறைகளை அறிவித்துள்ளது. இந்த புதிய நிபந்தனைகளின் படி, தங்களின் அவசரத் தேவைகளுக்கு, சொந்த நகைகளின் பேரில் அருகில் உள்ள கூட்டுறவு மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் வாங்கும் ஏழை, எளிய, நடுத்தர மக்கள், விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள். எனவே, மக்கள் நலன் கருதி, இந்தப் புதிய நிபந்தனைகளை ரிசர்வ் வங்கி உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்துவதோடு, தனியார் நகைக் கடைகளில் வாங்கப்பட்ட தங்கக் காசுகளின் தரத்தையும் பரிசோதித்து தங்கக் கடன் வழங்கவும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



● மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று அமெரிக்காவில் உள்ள உலகின் முதன்மையான பல்கலைக்கழகங்களில் ஒன்றான கலிபோர்னியா பல்கலைக்கழகத்திற்கு சென்றார். அங்கு அண்மையில் தங்கள் ஆராய்ச்சியின் மூலம் 'குரங்கம்மை' நோய்க்கான மருந்துகளை கண்டுபிடித்துள்ளது பற்றி எடுத்துக்கூறி, மிகப்பிரம்மாண்டமான ஆராய்ச்சிக்கூடங்களை சுற்றிக்காட்டி சிறப்பித்தனர்.



● அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான எடப்பாடி கே. பழனிச்சாமி பிறந்தநாளை முன்னிட்டு திருச்செந்தூரில் சுப்பிரமணியசுவாமி கோயிலில் சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவரும், ஜெ.பேரவை மாநில செயலாளருமான ஆர்.பி உதயகுமார் பொது மக்களிடம் துண்டு பிரசுரங்களை வழங்கினார்.




கொடைக்கானல் கோடைவிழா சிறப்பு மலர்

மதுரை

தின பூமி

24.05.2025


# மலைகளின் இளவரசி கொடைக்கானல்

லீவு விட்டாச்சு, நல்ல வெயில் கொளுத்துது, ஒரே டென்சன், எங்கேயாவது குடும்பத்துடன் ஒரு சுற்றுலா சென்று வரலாம் என்றால் எங்கு செல்வது எப்படி செல்வது என்று குழப்பத்துடன் இருப்பவர்கள் நாங்கள் தரும் இந்த சுற்றுலா தகவல்களை படிங்க. உடனே புறப்படுங்க, சுற்றுலா என்றால் நாம் அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வரும் நகரம் மலைகளின் இளவரசி , தென்னிந்தியாவின் சுவிட்சர்லாந்து, கொடைக்கானல் தான். குளுமையின் இனிமையில் திளைக்கும் நகரம் கொடைக்கானல்.

கொடைக்கானல் என்ற பெயருக்கு காடுகளின் பரிசு என்று அர்த்தம். உண்மையிலேயே கொடைக்கானல் காடுகள் நமக்கு அளித்த பரிசாகத்தான் இப்போதும் விளங்குகிறது. கொடைக்கானலை கண்டுகளிக்க ஆண்டு தோறும் பல லட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். கொடைக்கானல் வரும் பயணிகளை வரவேற்கும் விதமாக அமைந்த முதல் சுற்றுலாத் தலம் வெள்ளி நீர் வீழ்ச்சி.



**வெள்ளிநீர் வீழ்ச்சி:**

கொடைக்கானல் வரும் சுற்றுலாப் பயணிகளை பன்னீர் தெளித்து வரவேற்கும் முகமாக அமைந்ததுதான் வெள்ளி நீர் வீழ்ச்சியாகும் கொடைக்கானல் ஏரியிலிருந்து வழிந்தோடும் தண்ணீர் இந்த வெள்ளி நீர் வீழ்ச்சியில் 184 மீட்டர் உயரத்திலிருந்து கொட்டுவது வெள்ளியை உறுக்கி ஊற்றுவது போல் இருக்கும்.இங்கே விற்கும் மிளகாய் பஜ்ஜியை காரமாக சாப்பிட்டுக் கொண்டே இந்த நீர் விழ்ச்சியின் அழகை ரசிக்கலாம். முன்பெல்லாம் இங்கு சுற்றுலாப் பயணிகள் குளிப்பார்கள். தற்போது இந்த நிலை இல்லாமப் போய் விட்டது.

**கொடைக்கானல் ஏரி:**

கொடைக்கானல் நகரின் இதயம் போன்ற பகுதிதான் கொடைக்கானல் ஏரி. சர் ஹென்றி லிவஞ்ச் என்ற ஆங்கிலேயரால் அமைக்கப்பட்டதுதான் இந்த ஏரி. 5 கி.மி சுற்றளவு கொண்ட 24 ஏக்கர் பரப்பளவு கொண்டது தான் இந்த ஏரி. கொடைக்கானல் ஏரியில் படகு சவாரி செய்வது என்பது சுற்றுலாப் பயணிகளின் மகிழ்ச்சியில் மறக்க முடியாத அனுபவமாக இருக்கும். கொடைக்கானல் ஏரியில் படகு சவாரிக்காக கொடைக்கானல் நகராட்சி, கொடைக்கானல் படகு குழாம், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆகியவை சார்பில் படகுகள் கட்டண அடிப்படையில் இயக்கப்படுகின்றது.

கொடைக்கானல் ஏரியினைச் சுற்றி உள்ள சாலையில் பயணிகள் பயணிக்க குதிரைச் சவாரி, சைக்கிளில் செல்ல சைக்கிள் சவாரி ஆகிய வசதிகளும் உள்ளது இதுவும் கட்டண அடிப்படையில். அதிகாலையிலோ அல்லது மாலையிலோ இந்த ஏரியினை சுற்றி வாக்கிங் செல்வது என்பது ஒரு சிறந்த அனுபவமாக இருக்கும். இந்த ஏரிக்கு அருகாமையில் குழந்தைகளுக்கான பொழுது போக்கும் அம்சங்கள் பல உள்ளன. 7பரிமான திரையரங்கம், ஸ்கேட்டிங் அரங்கம், டேசிங் கார் அரங்கம், சிறுவர் பூங்கா உள்ளிட்டவைகள் உள்ளன.

**பிரையண்ட் பூங்கா:**

கொடைக்கானல் பிரையண்ட் பூங்கா ஏரியின் கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இந்த பூங்கா 1900த்தில் ஆங்கிலேய வன அலுவலர் கெச்.டீ.பிரையண்ட் என்பவரால் உறுவாக்கப்பட்டுள்ளது. காடுகளாக இருந்த இப் பகுதியை பிரையண்ட் பூங்காவாக மாற்றியதால் இப் பூங்காவிற்கு அவர் பெயரே வைக்கப்பட்டு உள்ளது. ஆரம்பத்தில் வனத்துறையினரும் 1961 வரை நகராட்சித் துறையினரும், பின்னர் வேளான்மைத் துறையினரும், 1980 முதல் தோட்டக்கலைத் துறையினரும் இப் பூங்காவை பராமரிப்பு செய்து வருகின்றனர். இப் பூங்கா 20.5 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 16.15 ஏக்கர் அழகிய புல் வெளிகளாகவும் 2 ஏக்கர் வரை அழகிய பல வண்ண மலர் தோட்டங்களும் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 742 வகையான ரோஜா செடிகளும், வேறெங்கும் கிடைக்காத 80 வகையான மலர்ச் செடிகள் பூங்காவின் கண்ணாடி அறையில் வளர்க்கப்படுகின்றது. குறிப்பிட்ட பருவங்களில் பூக்கும் 35 வகையான மலர்ச் செடிகளும் ஆண்டு தோறும் பூக்கும் 50 வகையான மலர்ச் செடிகளும் இங்கு உள்ளது.இந்த ஆண்டு சுமார் 2 லட்சம் மலர்கள் பூக்கும் விதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**கோக்கர்ஸ் வாக்:**

கொடைக்கானல் ஏரிக்கு அருகில் அமைந்துள்ள இடம் தான் இந்த கோக்கர்ஸ் வாக். கொடைக்கானல் நகருக்கு 1870 ம் ஆண்டு ஆங்கிலேயே என்ஜினியர் கொடைக்கானல் நகரின் அழகில் தனது மனதை பறி கொடுத்த அவர் அங்கேயே தங்கினார் காலையும், மாலையும் கொடைக்கால் மலைப்பகுதியின் அழகை ரசிக்க இந்த பகுதியில் நடந்து செல்வது வழக்கம். இவர் நடந்த பாதைதான் கோக்கர்ஸ் வாக் ஆகும். இங்கிருந்து பார்த்தால் பசுமை கம்பளம் விரித்த மலைகளின் அழகை காணலாம். இப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தொலை நோக்கி கருவி மூலம் பெரியகுளம், வைகை அணை, மலைக் கிராமம், போன்றவற்றை காண முடியும்.

**தூண்பாறை:**

கொடைக்கானல் ஏரியிலிருந்து 7.4 கி.மீ தூராத்தில் அமைந்துள்ளது தூண் பாறைகள். வானை தொடுவது போன்று உயர்ந்து நிற்கின்ற மலை தொடர் திடீரென்று வெட்டி விட்டது போன்று தொடர்பின்றி துண்டித்து நிற்கிறது இங்கே. துண்டிக்கப்பட்ட பகுதியில் பாறைகள் சில தனித் தனியாக தூண்கள் போல் அமைந்துள்ளது. பார்வையாளர்கள் அரங்கிலிருந்து பார்த்தால் 2 பாறைகள் மட்டும் காடுகளுக்குள் இருந்து தலை காட்டுவது போல் தூண் பாறைகள் காட்சியளிக்கிறது.இந்த பாறைகளின் உயரம் சுமார் 122 அடி உயரம் ஆகும். இப் பாறைகளின் பின் பகுதிக்கு சென்று பார்த்தால் நான்கு தூண்பாறைகள் தென்படும். வானத்திலிருந்து தவழும் வெண் மேகங்கள் இந்த தூண்பாறைகளை மறைப்பதும் பின் விலகுவதும் என்று இயற்கை இங்கே கண்ணாம் மூச்சி ஆடுகின்றது.

**பசுமைப்பள்ளத்தாக்கு:**

கொடைக்காலில் இருந்து சுமார் 6 கி.மீ தூரத்தில் தூண்பாறை செல்லும் முன் காண வேண்டிய பகுதி இதுவாகும். இப்பகுதிக்கு மற்றொரு பெயரும் உண்டு சூசைட் பாய்ன்ட் அதாவது தற்கொலை முனை. தற்போது மிகவும் பாதுகாப்பான வேலி அமைக்கப்பட்டு உள்ளது. மிகவும் செங்குத்தான மலை முகட்டின் முனையில் அமைந்தது தான் இப் பகுதி. இங்கிருந்து பார்த்தால் பசுமையான மலை பகுதிகளை காண முடியும்.

**மோயர் பாய்ன்ட்:**

தூண் பாறைகளை கண்டு ரசித்த பின் பைன் மரக் காடுகள் உள்ளது இவற்றை ரசித்தபின் உள்ள பகுதிதான் மோயர் பாய்ன்ட். என்ற பகுதி இங்கிருந்து சற்று கீழ் இறங்கி பார்த்தால் மேகங்கள் நம்மை தழுவிய படி செல்லும் இதை ரசித்தபடி பசுமையான பள்ளத்தாக்குகளையும் காடுகளையும் கண்டு ரசிக்க முடியும்.

**குறிஞ்சியாண்டவர் கோவில்:**

இலங்கையை சேர்ந்தவர் பொன்ம்பல் ரங்கநாதன். இவரது மனைவி இங்கிலாந்து நாட்டை சேர்ந்தவர். இவர் தனது பெயரை லீலாவதி என்று மாற்றிக் கொண்டார். முருக பெருமான் மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார். அவர்கள் கொடைக்கானல் வந்த போது இங்கு முருகனுக்கு கோவில் இல்லாதது குறையாக இருந்தது. இதனால் கொடைக்கானலில் இருந்த படி பழனி முருகனை வழி பட்டு வந்தார். சில நாட்கள் மேகங்கள் பழனி முருகன் கோவிலை மறைத்துவிடும் எனவே இங்கு ஒரு கோவிலைக் கட்ட முடிவு செய்தார். 1936ம் ஆண்டு மே மாதம் 6ம் தேதி அவர் இக் கோவிலை கட்டி முடித்தார். அந்த நேரத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சிப்பூ பூத்துக் குழுங்கியது. இந்த குறிஞசி மலர்களில் ஆங்கிலேயப் பெண் மணி முருகனை கண்டுள்ளார். இதனால் இக் கோவிலுக்கு குறிஞ்சியாண்டவர் கோவில் என்று பெயரிட்டார். இக் கோவிலின் உள்ளே குறிஞ்சி செடிகள் எப்போதும் உள்ளது.

**சலேத் அன்னை ஆலயம்:**

1863ம் ஆண்டு செயின்ட் சீர் என்ற ஆங்கிலேய பாதிரியாரால் கட்டப்பட்டது தான் இந்த தேவாலயம். தனக்கு குணம் கிடைத்ததன் நினைவாக இந்த ஆலயத்தை இவர் கட்டினார். இந்த தேவாலயம் சுற்றுலாப் பயணிகளை கவரும் இடங்களில் ஒன்றாக உள்ளது.

**அருங்காட்சியகம்:**

கொடைக்கானல் வெள்ளி நீர் வீழ்ச்சியை அடுத்து அமைந்துள்ளது இந்த அருங்காட்சியகம். 1895ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது தான் இந்த அருங்காட்சியகம். சுதந்திரத்திற்கு முன் கொடைக்கானல் வந்த வெள்ளையர்கள் இங்கு ஆய்வுகள் நடத்தியுள்ளனர். பல அரிய வகை தாவரங்கள், பறவைகள், விலங்கினங்கள், ஆகியவற்றின் பதப்படுத்தப் பட்ட உடல்கள் மாதிரிகள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. 216 வகையான வண்ணத்துப் பூச்சிகளும் 114 வகையான பறவைகளின் உடல்களும் பதப்படுத்தப் பட்டு இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இதுவும் சுற்றுலாப் பயணிகளை கவரும் என்பதில் சந்தேகம் இல்லை.

செட்டியார் பூங்கா: கொடைக்கானல் குறிஞ்சியாண்டவர் கோவிலுக்கு செல்லும் முன் இந்த செட்டியார் பூங்கா அமைந்துள்ளது. இந்த பூங்காவும் தோட்டக்கலைத் துறையினரால் பாதுகாக்கப் பட்டு வருகின்றது. இந்த பூங்காவிலும் அழகிய ரோஜா, டேலியா, உள்ளிட்ட பல வண்ண மலர்கள் உள்ளது.

அப்பர் லேக் வியூ கொடைக்கானல் ஏரியின் அழகை மலையின் உயரத்தில் இருந்து பார்ப்பது தான் அப்பர் லேக் வியூ. இந்த மலைப்பகுதியில் இருந்து பார்த்தால் கொடைக்கானல் ஏரியின் முக்கால் பங்கு பகுதியை நாம் பார்க்க முடியும். இதுவும் ஒரு அழகானது தான்.

கொடைக்கானல் பியர் சோலை நீர் வீழ்ச்சி, பேரி பால்ஸ் நீர் வீழ்ச்சி, 500 ஆண்டு கால பாழமையான மரம் என்று சில சுற்றுலா இடங்களும் உள்ளது.

பேரிஜம் ஏரி: கொடைக்கானல் நகர் பகுதியில்

(II-ம் பக்கம் பார்க்க)













(I-ம் பக்க தொடர்ச்சி)

இருந்து சுமார் 28 கி.மீ தூரத்தில் அமைந்ததுதான் இந்த ஏரி இது இயற்கையாக அமைந்த ஏரியாகும். மலைகள் சூழ்ந்த பகுதியில் நடுவே அமைந்த இந்த ஏரிதான் பெரியகுளம் நகரின் குடி நீர் ஆதாரமாகும்.

**தொப்பிதூக்கும் பாறை:**

பேரிஜம் ஏரிக்கு செல்லும் முன் முதலில் அமைந்தது தான் இந்த பகுதி இந்த பாறையின் முனையில் இருந்து தொப்பியை தூக்கிப் போட்டால் அந்த தொப்பி காற்றின் வேகத்தில் மீண்டும் நம்மிடமே வந்து விடும். இதுவும் அழகு நிறைந்து காணப்படுகின்றது.

**அமைதிப்பள்ளத்தாக்கு:**

பேரிஜம் ஏரிக்கு சற்று முன் பகுதியில் அமைந்துள்ளது தான் இந்த சுற்றுலா பகுதி. இது மிகவும் அமைதியாக இருப்பதால் அமைதிப் பள்ளத்தாக்கு என்று கூறுகின்றனர். கொடைக்கானல் பேரிஜம் ஏரி, தொப்பி தூக்கும் பாறை , அமைதிப்பள்ளத்தாக்கு, பேரிஜம் ஏரியின் அப்பர் லேக் வியூ போன்ற பகுதி செல்ல வேண்டும் என்றால் கொடைக்கானல் வனத்துறையினரின் அனுமதி பெற்ற பின்னரே செல்ல முடியும்.



இந்த சுற்றுலா இடங்களுக்கு வகனங்களில் சென்று ரசிக்க முடியும். இவை தவிற டால்பின் மூக்கு என்ற பகுதிக்கு சுமார் 4 கி.மீ தூரம் வரை நடந்து சென்று இதன் அழகை ரசிக்க முடியும். வனத் துறையினரின் அனுமதியுடன் வனப் பகுதிகளில் டிரக்கிங் அதவது மலைப்பகுதிகளில் நடந்து சென்று வனப்பகுதிகளில் தங்கி இயற்கையின் அழகை ரசிக்கவும் முடியும். கொடைக்கானல் வனப் பகுதிகளில் மூலிகைகளையும் பார்க்கவும் முடியும். இந்த பகுதிகளை தவிற மேல் மலை வனப் பகுதிகளுக்கும் செல்ல முடியும்.

கொடைக்கானலை ஒரே நாளில் சுற்றிப் பார்க்கவும் முடியும் இரண்டு நாட்கள் தங்கி இதன் அழகை கண்டு ரசிக்கவும் முடியும் ஒரு நாள் என்றால் பட்ஜெட் டூராக ஏற்பாடு செய்து கொள்ளலாம். இரண்டு நாட்கள் என்றால் சற்று கூடுதல் செலவு பிடிக்கும். இரண்டு நாட்கள் என்றால் முழுமையான டூராக அமையும். கொடைக்கானலை சுற்றிப் பார்க்க தனியார் வாகனங்களும் உள்ளது. அரசு பஸ் வசதியும் உள்ளது. என்ன கிளம்பி விட்டீர்களா கொடைக்கானலுக்கு.

ஆர்.கிட்டுத்துரை
கொடைக்கானல்.







































# அன்பின் அன்னை புனித சலேத்மாதா







பிரான்ஸ் நாட்டில் உள்ளது லா சலேத் என்னும் சிற்றூர். 1846 ம் ஆண்டு செப்டம்பர் 19 ம் தேதி இந்த சிற்றூர் சிறுவர்களான மாக்சிமின்ஜிரோ, மெலானிமாத்யூ ஆகியோருக்கு கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் அன்னையான சலேத் மாதா காட்சி கொடுத்தார். அவர் காட்சி கொடுத்த இடத்தில் புதிதாக ஒரு நீரூற்று உறுவானது. அந்த இடத்தில் தான் லா சலேத் தேவாலயம் கட்டப்பட்டது.

கொடைக்கானலில் உள்ள சலேத் அன்னை ஆலயம் உலகில் இரண்டாவது சலேத் அன்னை ஆலயமாகும். கடந்த நூற்றாண்டில் தமிழ் நாட்டில் இறை பணி ஆற்ற வந்தவர்தான் செயின்ட் சீர் அருட் தந்தை. தனது சொந்த நாடான பிரான்ஸ்சிற்கு சென்றபோது தீராத நோயினால் பாதிக்கப்பட்டார். அப்போது சலேத் அன்னையை நோக்கி ஜெபித்தார் நோய் குணமாயிற்று. இதன் நன்றியாக கொடைக்கானலில் சலேத் அன்னை ஆலயத்தை கட்ட முடிவு செய்தார். அப்போது ஆலயம் கட்ட பிரான்ஸ் நாட்டை சேர்ந்த செல்வ சீமாட்டி தனது மகள் குணம் பெற்றதற்கு நன்றியாக செயின்ட் சீர் அடிகளாருக்கு உதவினார்.

1863 ம் ஆண்டு மார்ச் 17 ம் நாள் கொடைக்கானல் புனித சலேத் மாதா ஆலயம் கட்ட அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டிகன் என்பவர் ஆலய மணிக் கூண்டை கட்டித்தந்தார். சலேத் அன்னையின் திரு உருவச்சிலையையும் புனித ஜோசப் சிலையையும் பிரனோபிளின் பிஷப் கொடுத்தார். இவ்வாலயத்தில் உள்ள மைக்கேல் அதிதூதரின் சிலையை அருட் தந்தை மைக்கேல் பெஸ்லூார்டு வழங்கினார் அவ்வாலயத்தில் உள்ள 14 ஸ்தலங்களையும் இத்தாலி மிஷினரி சபையினர் வழங்கினர். ஆலய ஜன்னல் கண்ணாடிகளுக்கு பிரான்ஸ் பென்மனி போன்கிளைர் வண்ணம் தீட்டினர். இவ்வளவு பெருமை மிக்கது கொடைக்கானல் புனித சலேத் அன்னையின் ஆலயம். அனைத்து மதத்தினரும் இந்த ஆலயத்தில் வழிபடுவதும், பெற்ற நண்மைகளுக்கு நன்றி செலுத்துவதும் வாடிக்கை. பல புதுமைகளை அனுபவித்தவர்கள் எண்ணிலடங்காதவர்கள்.

கொடைக்கானல் புனித சலேத் அனனையின் ஆண்டு திருவிழா கடந்த 145 ஆண்டுகளை கடந்து இன்றும் நடைபெற்று வருகின்றது. ஒவ்வெரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 14 மற்றும் 15 ம் தேதிகளில் இவ்வாலய திரு விழா மத ஜாதி பேதங்களை கடந்து அணைவராலும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

ஆர். கிட்டுத்துரை,
கொடைக்கானல்












இயற்கை எழில் சூழ அமைந்திருக்கும்

# ஹோட்டல் கோடை இன்டர்நேஷனல்



மலைகளின் இளவரசியாம் கொடைக்கானலில், இயற்கை எழில் சூழ அமைந்திருக்கும் ஹோட்டல் கோடை இன்டர்நேஷனல், விருந்தோம்பல் துறையின் கலங்கரை விளக்காக திகழ்கிறது.

உரிமையாளர் திரு பாண்டுரங்கன் அவர்களின் தலைமையின் கீழ் செயல்படும் இந்த விடுதி அதன் வாடிக்கையாளர்களுக்கு பாரம்பரிய உபசரிப்புடன் கூடிய அனைத்து நவீன வசதிகளையும் வழங்கி வருகிறது.

ஹோட்டல் கோடை இன்டர்நேஷனலில் குடும்பமாக சுற்றுலா வருபவர்களுக்கும், வணிகரீதியான பயணங்களை மேற்கொள்பவர்களுக்கும், தங்குவதற்கு ஏதுவாக அனைத்து வசதிகளையும் கொண்டு, இயற்கையான சூழலில் 90 சொகுசு அறைகள் உள்ளன.

மேலும் பரந்த புல்வெளிகள், குழந்தைகள் விளையாட்டு பூங்கா, கால்ப் மைதானம்,இயற்கை நீர்வீழ்ச்சிகள், கண் கவரும் மலர் தோட்டங்கள், போன்ற சுற்றுலா பயணிகளை கவரும் அனைத்து அம்சங்களும் அமைந்துள்ளன.

சாகச விளையாட்டு பிரியர்களை கவரும் வகையில், ஜிப் லைன், தொங்கு பாலங்கள் போன்ற சாகச விளையாட்டுகள் கொண்டுள்ள ஸ்கைவாக் சாகச பூங்கா இந்த விடுதியில் புதிதாக தொடங்கப்பட்டுள்ளது.

கோடை மாநகரின் சிறந்த உணவை வழங்கும் இங்குள்ள உணவு விடுதிகளில் உள்ளூர் முதல் சர்வதேச உணவு வகைகள் வரை பரிமாறப்படுகிறது.

சமீபத்தில் அதிநவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்டுள்ள 300 பேர் வரையில் அமரக்கூடிய பெரிய கருத்தரங்கக்கூடம், திருமணம், சுப நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்த ஏற்றதாக அமைந்துள்ளது.


கோடை மாநகரின் மையப் பகுதியில், அனைத்து சுற்றுலா தளங்களுக்கும் சென்று வர ஏதுவாக அமைந்துள்ள ஹோட்டல் கோடை இன்டர்நேஷனல், அர்ப்பணிப்புடன் கூடிய சிறந்த சேவையை தங்களது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி, விருந்தினர்களுக்கு தங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத தங்கும் அனுபவத்தைத் தந்து வருகிறது.

உரிமையாளர் திரு பாண்டுரங்கன் அவர்கள் கூறும்போது, தற்போது வழங்கப்பட்டு வரும் இ-பாஸ் செயல் முறை மிகவும் எளிதானது. எனவே சுற்றுலா பயணிகள் எவ்வித தயக்கமும் இன்றி உங்களது விருப்பமான கோடை மாநகருக்கு வருகை தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். உங்களை வரவேற்க இந்த மலைகளின் இளவரசியும், எங்கள் விடுதியும் தயாராக உள்ளது. மேலும் மலர் கண்காட்சியை காண வருகை தரும் அனைத்து சுற்றுலா பயணிகள் அனைவரையும், ஹோட்டல் கோடை இன்டர்நேஷனல் சார்பாக அன்போடு வரவேற்கிறோம்.





















கோடை விழாவிற்கு
வருகை தரும்
அனைவருக்கும்
எங்கள் நல்வாழ்த்துக்கள்
VIRAT KRISHNA
BUILDERS
Er. K.N. Krishna Kumar
B.E., M.I.E., F.I.V.,
Chartered Engineer & Approved Valuer
Licensed Building Surveyor
Sri Nallandavar Illam, A5, MM Street,
Kodaikanal-624 101 Dindukal Dt.
Kodaikrishna@yahoo.in / Kodaikrishna68@gmail.com
Cell: 94430 41766












Raahat inn
Experience the exotic feeling
Suites - Room - Restaurant
KODAIKANAL : 5/27-7, Laws Ghat Road,
Moonjikkal,- 624101. Tamilnadu. S. India
+ 91 - 04542-244533 Cell : 9486 444 533
info@raahatinn.com
www.raahatinn.com


கோடை விழாவிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகள்
அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கிறோம்
KODAI RESORT HOTEL
Coakers Walk, KODAIKANAL - 624 101. Tamil Nadu.
E-mail : manager@kodairesorthotel.com
Web Site : www.kodairesorthotel.com, Mob : 94433 40106
CRAIGMORE
28-30-19/5, FAIRY FALLS ROAD,
OBSERVATORY, KODAIKANAL, Dindigul,
Tamil Nadu – 624103
Ph : +91 94470 79944


கோடை விழாவிற்கு வருகை தரும்
அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்
Jayakumar
S.R.Builders
Engineering Architech, Real Estate
PhL (R) 04542 - 230423
Cell: 98421 84852, 94423 62170
E-mail: srbuilderskodai@gmail.com
2-3/210, Lawsghat Road,
Sam J.Garden, Palani Road Junction,
Perumalmalai,
Kodaikanal, Dindigul, Tamilnadu,
S.INDIA


இதயதெய்வம்
புரட்சித்தலைவி
அம்மா
அவர்களின் நல்லாசியுடன்
கோடைவிழா
மலர் கண்காட்சிக்கு
வருகை தரும்
சுற்றுலா பயணிகளை
வரவேற்கிறோம்
சுப்பிரமணி பால்ராஜ்
18வது வார்டு நகர் மன்ற உறுப்பினர்
ஆனந்தகிரி 1வது தெரு, கொடைக்கானல், செல் : 9842819350


கோடை மாநகரில்
அம்மா
கோடைவிழா மலர் கண்காட்சிக்கு
வருகை தரும் சுற்றுலா பயணிகளையும்
பொது மக்களையும் அன்புடன் வரவேற்கிறோம்
M.ஸ்ரீதர், B.Com.,
முன்னாள் நகர்மன்ற தலைவர்,
தலைவர் கூட்டுறவு பண்டக சாலை,
நகர் கழக செயலாளர்
கொடைக்கானல்.